மலரும்

# தமிழீழம்

வெளியீடு : தமிழீழ தேசிய இராணுவம்



Rs 3

# எனக்கு அச்சமாயிருக்கிறது.

— கவிஞர் மோசே பி. ஏ., பி. எல்., —

எனக்கு
அச்சமாயிருக்கிறது

புகை மண்டலம்
தேசிய சின்னமாகவும்
வெடிச்சத்தங்களே
தேசிய கீதமாகவும்
அங்கீகரிக்கப்பட்டு விடுமோ !

எனக்கு
அச்சமாயிருக்கிறது

சுதந்திர தேவியின்
முகம் வேண்டுமானால்
வெளியே இருக்கலாம்.
ஆனால்
பாதங்கள் ஏனோ
ரத்தச் சேற்றுக்குள்ளே
புதைந்திருக்கிறது !

எனக்கு
அச்சமாயிருக்கிறது

துப்பாக்கி ஏந்துவதற்கு
இல்லை
துப்பாக்கி ஏந்துகிற
துர்ப்பாக்கியம்
வந்து விடுமோ !!

என் இனிய
தோழனே !
உன் மார்பில்
சில ஈட்டிகளும்
தோட்டாக்களும்
முத்தமிட்ட தடமிருந்தால்
போதும்.

வரலாற்று மேகத்தின்
வான ஊர்வலத்தை தடுக்க
எந்த சிங்கள சிட்டுக்கும்
வல்லமை இல்லை
உங்கள் நம்பிக்கையின்
பாதங்களில்
என் முத்தங்கள்..

★★★★★★★★★★★★★★★★★★

## வரலாற்று முத்திரைகள்

— கதிரவன் —

கண்ணீரை உதிர்த்து
கடல் அலையோடு
காலம் தள்ளும்
ஈழத் தமிழனே !

உன்னுடைய
உடமைகளும்
உயிர்களும்
இன வெறிக் கழுகுகளால்
வேட்டையாடலாம் !

இன்று .........
உன்னுடைய சூருவளிப் பூமியில்
சிந்தும் இரத்தத் துளிகள்

நாளைய .........
விடியலைப் பிரகடனப்படுத்தும்
வரலாற்று முத்திரைகள் அல்லவா !!

ஈழத்தமிழனே !
இன்றைய இனவெறிச் சூருவளிப் படைகள்
உன்னுடைய பீரங்கிப் படைகளால் அழியட்டும்.

★★★★★★★★★★★★★★★★★★

# எமது நோக்கு



மலர் : ஒன்று. செட்டம்பர் 1985. இதழ் : ஒன்று

## நெஞ்சு பொறுக்குதில்லையே............

ஈழத்தமிழினத்தின் இன்னல் மிகுந்த இக்கால கட்டத்தில்- சிங்கள அரசும் அதன் கூலிப்படைகளும் தமிழினத்தையே பூண்டோடு அழித்தொழிக்கும் நோக்குடன் நடத்திவரும் இனப்படுகொலைகள், கொள்ளைகள், சித்திரவதைகள் பற்றிய செய்திகள் தினமும் கேட்டவண்ணம் இருக்கும் போது, ஒரு வித்தியாசமான செய்தி போராளிகள் அனைவருமே வெட்கித் தலைகுனியுமளவிற்கு கொடூரமிகு பயங்கரப் படுகொலைகள் பற்றிய செய்தி கேட்டு கலங்கி நிற்கின்றோம்.

முப்பது ஆண்டுகளாகத் தங்கள் வாழ்க்கையையே ஈழத்தமிழினத்தின் நல்வாழ்வுக்காகவும், தமிழீழ விடுதலைக்காகவும் அர்ப்பணித்த தியாகத் தலைவர்கள் திரு. வி. தர்மலிங்கம், திரு. மு. ஆலாலசுந்தரம் ஆகியோர் விடுதலைப் போராளிகளின் பெயரில் உலவிவரும் வெறிக்கும்பலொன்றினால் எம்மிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர். சிங்கள அரச ஏவல் படைகளின் அட்டூழியங்களினால் மட்டும் அல்லலுற்ற தமிழீழ மக்கள் சில காலங்களாக ஆயுதமேந்திய, இரக்கமற்ற சில காட்டுமிராண்டிகளாலும் தொல்லைக்குள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். அதன் உச்சக்கட்டம் தான் இக்கொலைகள். எவ்வித அடக்கு முறைகளுக்கும் அஞ்சாது சிறைவாசம், தடியடி, போன்றவற்றையெல்லாம் இன்முகத்துடன் ஏற்று தம் இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்த இந்தத் தலைவர்கள் கோழைத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர். இது அடக்கு முறையின் ஒரு அங்கமாக இருக்கலாம். அதிகாரப் போட்டியில் ஏற்பட்ட அலங்கோலமாகவும் இருக்கலாம். எவ்வாறாயினும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட இத் தமிழ்த் தலைவர்களின் படுகொலைக்கு அம்மக்களே பதில் சொல்லும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

ஆயுதங்களை வைத்திருப்பதனால் எதனையும் செய்யலாம்-எப்படிப்பட்ட விளக்கமும் கொடுக்கலாம்-மக்கள் என்ன செய்வார்கள் என நாம் நம்மையே ஏமாற்றமுடியாது. அடக்குமுறை சிங்கள அரசிடமிருந்து மட்டுமல்ல தமது இளைஞர்களிடமிருந்து வந்தாலும் கூட அதனை எதிர்க்க நம் மக்கள் தயங்கவே மாட்டார்கள். அடக்கியாள நினைக்கும் யாரும் அதிககாலம் வாழமுடியாது. இன்று மறைக்கப்பட்டாலும் என்றோ ஒரு நாள் உண்மைகள் வெளியாகும். அன்று மக்களால் தீர்ப்பும் வழங்கப்படும். மறைந்த தலைவர்களின் குடும்பங்களுக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்கள். அத்தலைவர்களின் அளப்பரிய சேவையை நினைவு கூர்ந்து, அஞ்சலி செலுத்தி நிற்கிறோம்.

# தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்!

கொலை வெறியர்களின் குண்டுகளுக்கு இரையாகிப் போனவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் ஆலாலும், தருமரும்.

எப்படியும் வாழலாம் என்று வாழ்ந்தவர்களல்ல - அவர்கள் இலட்சியவாதிகள்-முப்பதாண்டுகளுக்கு முன்னிருந்து முழுமையாக உழைத்தவர்கள்-

வியர்வை சிந்தியவர்கள்-கண்ணீர் விட்டவர்கள் - இரத்தம் பாய்ச்சியவர்கள்-

தமிழ் வாழத், தமிழினம் வாழத், தமிழ் மண் ஆளத் தம் உயிரையே பணயம் வைத்தவர்கள்-

அப்படியே தமிழ் மண்ணில் விடுதலை வித்தை விதைத்தவர்கள் - சுதந்திரப் பயிரை வளர்த்தவர்கள்-

சொத்தை இழந்து, சுகத்தை இழந்து, சொந்தத்தை இழந்து, சொந்தத் தொழிலை இழந்து தமிழரசுக் கட்சியை, தமிழர் விடுதலைக் கூட்டணியை வளர்த்தவர்கள். அந்த இயக்கத்தின் விசுவாசிகள்-

தமிழின விடுதலைக்குச்செங்களம் பலகண்டு, சிறைபுகுந்து, தம் சொந்த மண்ணின் விடுதலைக்கு முப்பதாண்டுகள் உழைத்து ஓடாகிப் போனவர்கள்-

விடுதலைக்கென்றே விட்டு வைத்ததம் உயிர்களை, அதுதான் அவர்களால் விடுதலைக்குக் கொடுக்கக்கூடிய அதி உயர்ந்த தியாகம் - அந்த உயிர்களைத் தம் சொந்த மண்ணில், நம்மவரே பறித்தெடுத்தார்கள், என்ற பொழுது,

அழிந்து போகட்டும் தமிழினம் என்று ஏவிவிடப்பட்ட சிங்கள இனவெறி குண்டர்களும், ஏகாதிபத்திய வெறி அரசுக் கூலிப் பட்டாளமும், தமிழர்களைக்கொன்று குவித்த பொழுது, ஆண்டவனை வேண்டிக்கொண்டு அடங்கிப் போனவரெல்லாம், நிமிர்ந்து நின்று ஏன் என்று கேட்டார்கள்-

ஏன், ஆண்டவன் கோவில்களே, சிங்கள-பௌத்த இனமத வெறிக்கூட்டத்தால் தகர்க்கப்பட்ட பொழுதும், வணபிதாக்கள் அந்த வெறியர் குண்டுகளுக்குப் பலியாக்கப்பட்ட பொழுதும், முழந்தாளில் நின்று கண்ணீர் விட்டு, ''கர்த்தரே காத்தருளும்'', என்று போனவர்களும்கூட, எழுந்து, யார் இப்படுபாதகத்தைச் செய்தார்கள்? என்று கேட்டனர்-

தமிழர்களைத், தமிழ்ப்பெண்களை, ஏன் தமிழ்க் குழந்தைகளைக் கூடக் கொன்றழிக்கிறதே, அந்த சிங்களக் காடையர் கூட்டம், ''கட்டுப்பாடற்ற காட்டுமிராண்டிச் சிங்கள இராணுவக் கூட்டம்'' என சிங்களஅரசைக் குற்றம் சுமத்திய உலகமன்றம், குறிப்பாக பாரத மன்றம் கூட அனுதாபத்தை அடக்கிக்கொண்டு, பரிதாபகரமாகத் தமிழ்ச் சாதியைப்பார்த்து கேட்கிறார்கள், 'இவர்களையுமா கொன்றீர்களென்று'! குரல்கொடுக்கிறார்கள்-

ஆம்! தருமர், ஆலால் கடத்தப்பட்டனர்-கண்கள் கட்டப்பட்டனர்-வாய்கள் அடைக்கப்பட்டனர்-இரவோடிரவாய் சித்திரவதை செய்யப்பட்டனர் - விடிவதற்குள் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாக்கப்பட்டனர்-தெருவோரங்களில் வீசப்பட்டனர்-

காலைப் பொழுதினிலே கண்டோரெல்லாம் கதறிஅழுதார்கள், அடப்பாவிகளே! யாரை நோக்கியடா உங்கள் துப்பாக்கியை நீட்டினீர்கள்?

''யார் இந்தத் துரோகத்திற்குப் பொறுப்பு ஏற்கிறீர்கள்?'' என்று பொங்கி எழுந்த தமிழர் வெள்ளம், குற்றவாளிகளைக் கூண்டிலேற்றி, ''ஒரு துப்பாக்கியை நீட்டினாய், இந்தப் பத்துவிரல்களையும் நீட்டிப் பல கோடி மனித நெஞ்சங்கள் கேட்கிறோம்!'' என்று களத்திலே நின்று கேட்டார்கள்.



திரு. மு. ஆலால சுந்தரம்

# தருமம் மறுபடி வெல்லும்!

பழிமிகுந்த படுபாதகத்தை இனி அழித்து விட முடியுமா?

விடுதலை வித்துக்கள் வீசிய, விளை நிலத்தில் சுதந்திரப்பயிர் வளர்த்த தமிழினத்தின் வேரையல்லவா அறுத்தீர்கள்!

கட்டி வளர்த்த விடுதலைக் கோபுரத்தின் உச்சியில் நின்று அதன் அத்திவாரத்தை யல்லவா தகர்த்தீர்கள்!

ஓ! தமிழா, வரலாற்றைப்புரட்டிப்பார்-37 ஆண்டுகள் மறைந்துவிட்டன. ஆனால், 1948 ஆம் ஆண்டு இலங்கை நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது. சிங்களவர் கையில் ஆட்சி சென்றது. அந்த சேனநாயக்காவின் சிங்கள அரசு, பத்து லட்சம் பாட்டாளி மக்கள்-மலையகத் தோட்டத் தொழிலாளர் குடியுரிமையை, வாக்குரிமையைப் பறிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்தது-



சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப்போராட்டத்தில் கைது செய்யப்பட்டு போலீஸ் நிலையத்தில் தருமர்

ஜப்பானில் வீசப்பட்ட அமெரிக்காவின் விசவாயுக் குண்டைவிடப் பயங்கர விளைவுகளை இலங்கை மண்ணில் ஏற்படுத்திவிட்ட இந்தக் குடியுரிமை சட்டத்தின் கொடுமைகள் இன்னும் மறைந்துவிடவில்லை-

இலங்கைத் தமிழினத்தைப் பூண்டோடு அழித்திட வந்த முதற்சட்டமே இந்தச் சட்டமென்று, மறைந்து விட்ட தலைவர்கள் தந்தை செல்வா, வன்னிய சிங்கம், நாகநாதன் தொடங்கிய போரின் அத்திவாரமல்லவா தமிழரசுக்கட்சி-

தமிழ் மொழி, தமிழினம், தமிழ் மண்பாதுகாத்திடத்-தமிழனைத் தமிழனே ஆண்டிடத் ''தமிழ்மண்ணில், தமிழரசு - மத்தியில் கூட்டரசு'', என்று கொள்கைப் போரைத் தொடங்கி, சுதந்திரஇலட்சியத்தை வளர்த்த கட்சியல்லவா, தமிழரசுக் கட்சி-

1953 இல் பாட்டாளி மக்களைப் பட்டினி போட்டுப் பணிய வைத்திடப் பங்கீட்டு அரிசியை வெட்டிக் குறைத்த முதலாளித்துவ, யூ. என். பி அரசை, வீழ்த்திட, ''சமசமாஜ கம்யூனிஸ்ட்'' இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்துபோரடியதுதான், தமிழரசுக் கட்சி.

1956 ஆனி 5-ல் நாடு முழுவதும் தனிச் சிங்களமே அரச மொழி, ஆட்சி மொழி என்று ஆட்சி மன்றத்தில் வந்த சட்டத்தை எதர்த்து, எதிரில் காலிமுக மைதானத்தில், அறப்போர் நடத்தி செங்களமாடி வளர்ந்த கட்சி, தமிழரசுக் கட்சி.

1957ல் அந்தச் சிங்களச்சட்டத்தின் சின்னமாம், ''சிங்கள - ஸ்ரீ'' தமிழ் மண்ணில் நுழைய வந்த பொழுது, ''உயிரைக் கொடுத்தும், தமிழைக்காப்போம்'' என்று தமிழரசுக் கட்சி திர்டானித்த பொழுது, மோட்டார் வண்டிகளில் சிங்களத்தை அழித்துத் தமிழைப் பொறித்தவர்தான், உடுவில் தருமலிங்கம். சிறை பிடித்தது சிங்கள அரசு! தமிழ்த் தலைவர்களை இராணுவ முகாமில் அடைத்தது - இனக் கலவரமே வெடித்தது.

மறுபடி 1958ல் இனக் கலவரம் வெடித்தது - பல ஆயிரம் தமிழர் மடிந்தனர்.

1961ல் தமிழ் மண்ணில் சிங்களமே படையெடுத்த பொழுது, அதை தடுத்து நிறுத்திடத் தமிழ் மாநிலங்களில் தொடங்கியது அறப்போர், தமிழ் மாநிலத்தில், சிங்கள அரசு இல்லை எனும் அளவுக்குப் போராட்டம்- தருமரை நினைத்துப் பாருங்கள், எத்தனை தீவிரத்துடன் அப்போராட்டத்தில் ஈடுபட்டார்.

''தமிழரசு'' தனியரசு முத்திரை வெளியிட்டனர். இராணுவச் சட்டம் வந்தது - தமிழரசுக் கட்சி தடை செய்யப்பட்டது. தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

*1972*ல் இலங்கை அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட பொழுது, தமிழருக்குத் 'தமிழரசு - மத்தியில் கூட்டரசு' அடிப்படையில், சோஷலிசத்தத்துவ மார்க்கத்தில், தமிழரசுக்கட்சி சார்பில் அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கிட உழைத்தவர்கள், தருமரும் ஆலாலும்.

1976ல் தமிழர் விடுதலைக் கூட்டணி, வட்டுக் கோட்டையில், சுதந்திரத் தமிழீழத் தீர்மானம் நிறைவேற்றிடத் தீவிரமாக உழைத்தவர்கள் தருமர் - ஆலால்

வரலாற்றைப் புரட்டுங்கள் -

கடந்த முப்பதாண்டுகளில் ஆலாலசுந்தரம் தருமலிங்கம் தமிழ் மண்ணில் போகாத இடமில்லை - பேசாத இடமில்லை - செய்யாத தொண்டில்லை.

அரசியல் தீர்மானங்களில், அரசியல் போராட்டங்களில் தீவிரமாக ஈடுப்பட்டார்கள். அமிர்தலிங்கத்தின் வலக்கரமாவே, கட்சியில் திகழ்ந்தார்கள் -

ஏன், ஆயுதம் எடுத்துப் போராடுவோம், என்ற இளைஞர்களுக்கு உதவி செய்யவில்லையா? அந்த இயக்கத்துக்கு அரணாக இருக்க வில்லையா?

சிறையில் தமிழ் இளைஞர்கள்சித்திரவதைப் பட்டதையெல்லாம் சிங்களப் பாராளுமன்றத்தில், உலக மன்றத்தில் எடுத்துரைக்கவில்லையா? போர்க்குரல் எழுப்பவில்லையா?

பல ஆண்டுகள் சிங்களச் சிறைகளில் அடைக்கப்பட்டுச் சித்திரவதைக்குட்பட்ட தமிழ் இளைஞர் குடும்பங்களின் கண்ணீர் துடைத்திட, நிதிதிரட்டி அவர்கள் இருப்பிடமெல்லாம் சென்று ஆறுதல் சொல்லித் துயர் துடைக்க வில்லையா?

தமிழினத்தின் விடுதலையில் எவ்வளவு நம்பிக்கை கொண்டாரோ அவ்வளவுச்கு உலக அரங்கில் தருமர், "மாஸ்கோ" அணிதான். "மாஸ்க்கோ"வுக்கே பல தடவை சென்றிருக்கிறார். ஆசிய- ஆப்பிரிக்க நட்புறவு மகாநாடுகளுக்குச் சென்றிருக்கிறார். பாலஸ்தீன விடுதலையைப் பலமாக ஆதரித்தார். இடது சாரித் தோழர்களெல்லாம் அவருக்கு அன்பர்கள் - நண்பர்கள்.

தமிழீழத்தின் தலைநகராம் திருகோணமலை, உலகின் இயற்கைத் துறைமுகப்பகுதி, இந்து மாசமுத்திரப்பிராந்தியத்தின் கேந்திரப்பகுதி இதனை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குத் தாரை வார்த்திட, இராணுவத்தளமாக்கிட, "ஜே. ஆர். முதலாளித்துவக் கும்பல்" தீர்மானித்தது என்றதுமே, தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் சார்பில் அன்றைய எதிர்க் கட்சி முதல்வர்" அமிர்தலிங்கம் சிங்கள ஆட்சி மன்றத்திலும் உலக அரங்கிலும் தீவிரமாக எதிர்த்தார்கள். இடது சாரி - எதிர்க் கட்சி அணிகளை ஒரணியில் திரட்டி, அமெரிக்காவுக்கும், ஜே. ஆர் அரசுக்கும் எதிர்ப்புக் காட்டினார் தருமலிங்கம். இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் - இந்திய அரசின் நட்பே வளர்ந்தது இப்படித்தான்.

1983ல், தமிழீழ இலட்சியத்தைக் கைவிட வேண்டும் - ஒற்றையாட்சி இலங்கை அரசுக்கு விசுவாசப் பிரமாணம் செய்ய வேண்டும் என்று சிங்கள அரசு, அரசியலமைப்பைத்திருத்திய பொழுது, "இதற்கு அடிபணியோம், - பாராளுமன்ற பதவிகளை தூக்கி எறிவோம்" என்று மக்கள் தந்த பதவிகளைக்கூடத் தூக்கி எறிந்து விட்டுக் களத்தில் நின்று மக்களுடன் மக்களாகச் செயல்படவில்லையா? தங்கள் தொழில்களையே இழந்து நிற்க வில்லையா?

நாடு நரபலிக்களமாக்கப்பட்ட பொழுது, தமிழ் மக்கள் நாதியற்றுத் தவித்த பொழுது, வெறுங்கையோடு, தமிழ் மண்ணில் தம் மக்களுடன் வாழ்ந்து மடிவோம் என்று போராடிக் கொண்டிருந்தவர்கள்தான் ஆலாலும்-தருமரும். அவர்களுக்குத்தான் இந்தப் பரிசுகள்.

தருமர் ஆரம்ப நாட்களில் தமிழரசுக் கட்சிக் கூட்ட மேடைகளுக்கே வரமாட்டார். வந்தாலும் தூரத்தில் நிற்பார்- நாலு முழ வேட்டி அரைக்கைச் சட்டை சிலவேளைகளில் "நாஷனல் - கழுத்தில் ஒரு சுற்று சால்வை, சிரித்துக் கொண்டேயிருப்பார் - சிந்தனைப் புகைகளை விட்டுக் கொண்டேயிருப்பார். சாதாரண இடங்களிலெல்லாம் சாதாரண மக்களுடன் பேசிக்கொண்டிருப்பார் -

ஆலால் பள்ளிப் பருவத்திலிருந்தே போராட்டக்களத்திற்கு வந்தவர். தமிழகத்து அண்ணாவின் பாணியில் அடுக்கு மொழித் தமிழில் அலாதியான அரசியல் - இலட்சிய விமர்சகர் - பிரச்சாரப் பீரங்கி. கவிதை பாடுவார். நாடகங்கள் நடத்துவார் நடிகராகவே தோற்றுவார் - நாட்டு மக்களிடத்தில் வீணில், அடிமைகளாய் வீழ்ந்து கிடந்த மக்களிடத்தில் விடுதலை வேட்கையை ஊட்டினார் - தமிழ்த் தொழிலாளர் அமைப்புக்களைக் கட்டியெழுப்பித் தமிழினத்தின் விடுதலைக்குப் போராட வைத்தார். ஒரு கலைஞராகவே காட்சியளிப்பார்.

ஆலாலின் பேச்சில் தருமருக்கு அலாதி விருப்பம் அடிக்கடி சந்தித்துப் பேசுவார்கள்- இறுதிவரைக்கும் இணைபிரியாமல் தமிழர் விடுதலைக் கூட்டணிக்காகவே இயங்கியவர்கள் - ஒன்றுகவே நம்மை விட்டுப் பறித்தெடுக்கப்பட்டார்கள் -

தொண்டர்களாக வாழ்வைத் தொடக்கியவர்கள் - மக்கள் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் - ஆனுல் மதிகெட்ட மூடரால் ஒரு நொடியில் உயிர் பறிக்கப்பட்டவர்கள் -

எண்ணிப் பாருங்கள்!

தமிழகத்து நாளேட்டினில், ஒரு செய்தி-யாரோபெயரைச் சொல்லாத போராளியின் பொய்யான வாக்குமூலத்தின் மொழி பெயர்ப்பு, சின்ன ஆங்கிலச் செய்திக்குப் பெரிய தலைப்பு தமிழில்-

''அமிர்தலிங்கம் லோங்கோவால் ஆக்கப்படுவாரா?''

ராஜீவ்- லோங்கோவால், ''பஞ்சாப் ஒப்பந்தம்'' உலகமே புகழ்ந்தது- பாரத எதிர்க்கட்சிகள் அனைத்துமே பாராட்டுப்பத்திரம் படித்தன. மக்கள், லோங்கோவால் தலைமையில் அணிதிரண்டார்கள்- மக்களுக்கு நல்லதென்பதைச் சரியென்றுபட்டதைச் செய்பவன்தான் தலைவன்-.

ஆனுல், அப்படிப்பட்ட பாரதப்பிரதமர் அன்னை இந்திரா, பஞ்சாப் தலைவர் லோங்கோவால் சுடப்பட்டனர். கொலையாளிகள் அமெரிக்காவில்'' ''சி. ஐ. ஏயில், பாகிஸ்தானில் பயிற்சி பெற்றவர்கள் என்று செய்திகள் உறுதிப்படுத்தின.

அப்படி கொலைகள் நடந்ததற்குப்பிறகு, ''அமிர்தலிங்கம் லோங்கோவால் ஆக்கப்படுவாரா'' என்று, தமிழ் ஈழ மண்ணில் தீவிரவாதிகள்,தமிழர் விடுதலைகூட்டணிக்கு'' எச்சரிக்கைத் தெருக் கூத்துக்கள், சுவரொட்டிகள் போட்டிருக்கிருர்கள், அடையாளங் காட்டி இருக்கிருர்கள்.

''தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சுவார்த்தைக்குப் போகிறது-ஒப்பந்தத்தில் கையொப்டம் போட்டுவிட்டது. இந்தியாவிலிருந்து, ஈழத் தமிழர் மூவர்நாடு கடத்தப்பட்டமைக்குக் கூட்டணி துணை போய்விட்டது-''

இப்படிப் பொய் மூட்டைகளைப்பரப்பினுர்கள் தமிழ் மண்ணில்- திட்டமிட்ட சதியின் ஆரம்பமே இந்தப்பொய்ப் பிரச்சாரங்கள்-

தங்கள் அரசியல் தவறுகளை, தற்கொலைத் தீர்மானங்களை மூடி மறைத்திட, இப்படிப் பிரச்சராங்கள்- இப்படிக்கொலைகள்.

எந்த இலக்கையும் அடையுமுன்னரே'' ''அமிர்தலிங்கம் லோங்கோவால் ஆக்கப்படுவாரா?'' என்று கேள்வியைப்பிரச்சாரப்படுத்திவிட்டு அமிர்தலிங்கத்தின் வலுக்கரங்கள் தமிழீழ மண்ணில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் - எண்ணிப்பாருங்கள். இதன் பின்னணியை.

இப்படுகொலைகளைக் கண்டித்து அனுதாபம் தெரிவித்தவர்களில் பாரதப் பொதுவுடமைக் கட்சித்தலைவர் பெரியவர் கல்யாணசுந்தரம், இலங்கை கம்யூனிஸ்ட் தலைவர் பீட்டர் கெனமன் இக்கொலைகளுக்குப்பின்னணியில் அமெரிக்கா- சி. ஐ. ஏ. உளவு நிறுவனம் செயல்பட்டிருக்கிறது என்று குற்றம் சுமத்தியிருக்கிருர்கள்- இப்பொழுது எண்ணிப்பாருங்கள்.

இந்திராவையும்-லோங்கோவாலையும்சுட்டுக் கொன்றவர்களுக்குப் பின்னணியில் சி.ஐ.ஏ. சுட்டுக்கொன்றவர்கள் கொலையாளிகள் தமக்கு வைத்துக் கொண்ட பெயர் தீவிரவாதிகள் ஆனுல் மறுபக்க உலகத்தில் இவர்கள் கைக்கூலிகள்-துரோகிகள்,

தமிழினத்தின் விடுதலைக்கு தருமரும்-ஆலாலும் கொடுத்த விலை மிக உயர்ந்தது தான். அதுதான் ஆகக் கூடுதலாக ஒரு மனிதனுல் கொடுக்கக்கூடியது. ஆனுல் அந்த விலைமதிப்பற்ற தியாகத்தை, அபகரித்துக் கொண்ட சக்திகளிடம், தமிழினம் சீரழிந்து விடக்கூடாது. இப்படுகொலைகள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு விடப்பட்டிருக்கும் சவால் என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

இக் கால கட்டத்திலும் ஒன்றுபட்ட தமிழ்மக்கள் சக்தியை மீண்டும் கட்டியெழுப்பித் தமிழினத்தின் விடுதலை இலக்கை அடைந்திட வேண்டும்.

—பார்த்தீபன்

★★★
★★★★

# விடுதலை இயக்கம் வளர்ந்த வரலாறு

மன்னராட்சி நிலவிய காலங்களில், ஒரு நாட்டின் சரித்திரம் அந் நாட்டை ஆண்ட மன்னர்களின் வரலாறாகவே எழுதப்படும்- மக்களாட்சி மலர்ந்த பின், மக்கள் சக்தியைத் திரட்டிச் செயற்பட்ட அரசியல் இயக்கங் களின் வரலாறே நாட்டின் சரித்திரமாக அமைகிறது. அக்கண்ணோட்டத்தில் அரசியல் கட்சிகளின் தோற்றம், வளர்ச்சி சமுதாயத் தில் அவற்றின் தாக்கம் அவற்றின் கொள்கை களில் ஏற்பட்ட மாற்றங்கள், சாதனைகள் ஆகியன அதி முக்கியத்துவம் வாய்ந்தவை.

,,இலங்கையில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஒரு ஸ்தாபனத்தை அமைக்க வேண்டு மென்னும் தனி நோக்கத்துடன் நாங்கள் எல்லோரும் இன்று கூடியிருக்கின்றோம்- இப் போதிருக்கும் நிலைமையில் யாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திரத் தமிழரசை நிறுவுவது இன்றியமையாததென்பது எமது திடமான நம்பிக்கையாகும்''

1949 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சி தோன்றிய நேரத்தில், அதன் தாபகரும் வழி காட்டியும் ஆரம்பத் தலைவருமான உயர்திரு சா. ஜெ .வே. செல்வநாயகம், கியூ- ஸி அவர்கள் தமது தலைமைப் பேருரையில் குறிப் பிட்டவாக்கியங்களே இவையாகும். இலங் கைத் தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கையை இரத்தினச் சுருக்கமாகத் தந்தையவர்கள் இங்கு கூறியிருக்கின்றார். இந்த இலக்கை நோக்கி, மக்களைத் திரட்டி, இயக்கம் வளர்ந்த வரலாறே கீழே தரப்படு கின்றது-

**இலங்கையில் தமிழன் தொன்மை :**

சரித்திரத்திற்குமுற்பட்ட காலம்தொடக்கம், இலங்கையில் தமிழன் வாழ்ந்தான் என்பது நடுநிலையில் நின்று- இந்நாட்டின் வரலாற் றை ஆராய்ந்தோர் எல்லோரும் ஏற்றுக் கொண்ட உண்மையாகும். காலத்துக்குக் காலம், சிங்கள மன்னரும் இந்நாட்டை ஆண்டனர். எனினும் 13ம் நூற்றுண்டு முதல் ஐரோப்பியர் இந்நாட்டைக் கைப் பற்றும் வரை, வட இலங்கையில் ஒரு நிலை யான தமிழரசும் கிழக்கிலங்கை உட்பட- வடகீழ் பிரதேசத்தில் தமிழ் வன்னிய குறுநில மன்னரின் ஆட்சியும் நிலவின, 1619 ம் ஆண்டு போர்த்துக்கேயர் வட இலங்கைத் தமிழரசைக் கைப்பற்றிய போதும் அவர்களுக்கோ அடுத்து வந்த ஒல்லாந்தருக்கோ அடங்க மறுத்து, கைலை வன்னியன், பண்டாரவன்னியன் போன்ற குறுநில மன்னர் தமிழாட்சியை காத்து நின்றனர். 19 ம் நூற்றுண்டு ஆரம்பத்தில் ஆங்கில ஆட்சியே வன்னியர் ஆட்சியையும் அழித்து இலங்கை முழுவதையும் கைப்பற்றி யதோடு 1833 ஆம் ஆண்டு முழுநாட்டை யும் ஒரே நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வந்து தமிழ் இனத்தின் சுயாதீனமும் தனிப் பிரதேசமும் ஐக்கிய இலங்கை என்ற ஒரே அமைப்பில் இணைக்கப்பட்டன.

ஆங்கில ஆட்சியிலிருந்து படிப்படியாக மக்கள் கைக்கு அதிகாரம் மாற்றப்பட்ட போது, தமிழ் இனத்தின் உரிமைகள் சிங் களப் பெரும்பான்மை என்ற வெள்ளத்தில் அமிழ்ந்திஅழிந்துவிடாதுகாக்கப்படவேண்டு மென்பதைதமிழ்த் தலைவர்கள் உணர்ந்தனர். 1918-ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங் கிரசை ஆரம்பித்த சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களே, 1924 ஆம் ஆண்டில் இலங்கை தமிழ் லீக்கை ஆரம்பித்துத் தமிழ் இனத்தின் தனித்துவம் காப்பதற்குத் 'தனி நாடு' வேண்டுமென்று கூறினர். டொனமூர் அரசியல்திட்டத்தைச்''சிறுபான்மையோரின் மரண சாசனம்'' என்று கூறி எதிர்த்தார் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் ஆயினும் இத்தலைவர்களின் முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

**சோல்பரி ஆணைக்குழு :**

இலங்கை மக்களின் கைக்கு அரசியல் அதிகாரத்தைப் பெருமளவிற்கு மாற்று வதற்கு ஓர் அரசியல் அமைப்பை ஆக்கும் பொருட்டு சோல்பரிப் பிரபுவின் தலைமையில் ஓர் ஆணைக்குழு பிரித்தானிய குடியேற்ற நாட்டு மந்திரியினுல் நியமிக்கப்பெற்றது. அக்குழுவின் முன் இலங்கைத் தமிழ் மக் களின் உரிமைக்கோரிக்கையை ஒரே குரலில் எடுத்துக் கூறும் பொருட்டு, 1944 ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் நிறுவப்பட்டது. அதன் தலைவர் திரு. ஜீ.ஜீ பொன்னம்பலம்அவர்கள் பாராளுமன்றத்தில் எந்த ஒரு சமூகத்திற்கும் ஏனைய சமூகங்களை நசுக்குவதற்குவாய்ப்பற்றவகையில், ''பெரும் பான்மை சமூகத்திற்கும் சிறுபான்மை சமூகங் களுக்குமிடையே சமபலப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும்'' என்ற கொள்கையை வெகு சிறப்புடன் எடுத்து விளக்கினர். டொனமூர் அரசியல் அமைப்பின் கீழ் தமிழ் இனத்திற்குச் சிங்கள பெரும்பான்மை

யினர் இழைத்த இன்னல்களை எடுத்து விபரித்தார். சோல்பரி ஆணைக் குழுவினர் இவற்றின் உண்மையை ஏற்றுக் கொண்ட போதிலும், சிங்கள மந்திரி சபையின் கோரிக்கைக்கே இணங்கினர். பிரித்தானியப் பாராளுமன்ற ஆட்சி முறையை அப்படியே இங்கும் புகுத்தும் அரசியல் அமைப்பை ஏற்படுத்தினர். அவ்வமைப்பின் 29-ம் பிரிவில்-எந்த ஒரு சமூகத்திற்கும், மதத்திற்கும் விரோதமான சட்டமியற்றுவதைத் தடுக்கும் ஒரு ஒரு பாதுகாப்பைத் தவிர, சிங்களப் பெரும்பான்மைக்கு கட்டுப்பாடற்ற அதிகாரம் வழங்கப்பட்டது. இதற்கு கைமாருகக் கட்டுநாயக்க விமானத் தளத்தையும் திருக்கோணமலைக் கடல் தளத்தையும் உடயோகிக்கும் உரிமையைப் பெற்றனர் ஆங்கிலேயர்.

இந்த ஒருதலைப்பட்சமானஅரசியல்அமைப்பை எதிர்த்து வாதாட இங்கிலாந்து சென்ருர் திரு. பொன்னம்பலம். அவர்கள் இங்கிலாந்தில் மேற்படி அமைப்பை எதிர்த்து வாதாடிய அதே சமயம் தமிழ்க் காங்கிரஸ் அரசாங்க சபை அங்கத்தவர்களும் ஏனைய தமிழ்ப் பிரதிநிதிகளும் ''கிட்டாதாயின் வெட்டென மற'' என்று கூறி, சோல்பரி வெள்ளை அறிக்கையை ஏற்கும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர். மலைநாட்டுத் தமிழ்மக்களின் பிரதிநிதியாக அன்று இருந்த திரு நடேசஐயர் அவர்களும் நியமனப் பிரதிநிதியாக இருந்த திரு. ஜ. எக்ஸ். பெரேரா அவர்களுமே வெள்ளை அறிக்கையை எதிர்த்து வாக்களித்த தமிழ்ப் பிரதிநிதிகளாவார். (எதிர்த்து வாக்களித்த ஒரேயொரு சிங்கள உறுப்பினர் காலிப்பிரதிநிதி திரு. டபிள்யூ. தகநாயகா ஆவார்.)

**தமிழ்க் காங்கிரஸின் வெற்றியும் : அதன் பிளவும் :**

சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ், முதல் தேர்தல் 1947ஆம் ஆண்டு நடைபெற்றது. அரசியல் அமைப்பில் பாதுகாப்புத் தேடத் தலைவர்கள் எடுத்த முயற்சி தோல்வி அடைந்த போதிலும், ''தமிழன் அடிமையாக வாழ ஆயத்தமில்லை'' என்ற கொள்கையைத் தமிழ் மக்கள் முன் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வைத்தது. ''தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'' என்ற கோஷம் தமிழீழம் எங்கும் ஒலித்தது. அடிமை அரசியல் அமைப்பை ஆதரித்த தமிழ் உறுப்பினர்களில், ஒருவர் தவிர அத்தனை பேரும் தோற்கடிக்கப்பட்டனர். வடக்கிலும் திருக்கோணமலையிலும் தமிழ் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது.

தமிழக காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாபெரும் வரவேற்பில் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் முதல்முதலாக ஒற்றையாட்சியில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காவிட்டால் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய இணைப்பாட்சி முறையைத் தமிழ் மக்கள் கோர வேண்டி வரும்'' என்று பல்லாயிரம் மக்கள் முன் பிரகடனம் செய்தார். இரண்டாண்டுகளின் பின் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் 'அடிப்படைக் கொள்கை அன்றே கருக்கொள்ளத் தொடங்கியது. தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை கோரி தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் பிரதமர் டி. எஸ். சேனநாயகா அவர்களுக்கும் குடியேற்ற நாட்டு மந்திரிக்கும் 1947ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் தேதி ஒரு தந்தி அனுப்பினர்.

இதற்கிடையில் தமிழ்க் காங்கிரசைச் சாராத சில தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரை அமைச்சராக்கி, திரு. டி. எஸ் சேனநாயக்கா மந்திரி சபையை அமைத்திருந்தார். அவர்களின் ஆதரவோடு பூரண சுதந்திரம் கோரி அவர் விடுத்த வேண்டுகோள் சகல சமூகங்களின் சம்மதத்தையும் பெற்றதாக ஆங்கில ஆட்சியினுல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி இலங்கை சுதந்திரம் பெற்றது. பிரித்தானிய ஆட்சியினுலோ அல்லது வேறு வெளியாரின் தலையீட்டினுலோ தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறலாம் என்ற நிலை முடிவடைந்தது.

எதிர்ப்பு வழியைக் கைவிட்டு, சிங்கள ஆட்சியோடு ஒத்துழைப்பு வழியை மேற்கொள்ளத் தீர்மானித்தார் தமிழ்க் காங்கிரஸ் தலைவர். தமிழ்க் காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் பாரதூரமான கருத்து வேற்றுமை தலை தூக்கியது. திரு. செல்வநாயகம் அவர்களும் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களும் அரசுடன் சேரும் யோசனையை எதிர்த்தனர் எனினும், கட்சியின் ஒற்றுமையைக் கருதித் திரு. செல்வநாயகம் அவர்கள் பகிரங்கமாக எதிர்ப்பைக் காட்டவில்லை. டாக்டர். நாகநாதன் அவர்கள் வெளிப்படையாக எதிர்த்துத் தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்றக் குழுவிலிருந்து வெளியேறினர்.

தமிழ்க்காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேருவதற்கு முன்பே, டி. எஸ். சேனநாயகா அரசாங்கம் இலங்கை பிரஜாவுரிமைச்சட்டத்தை நிறைவேற்றிவிட்டது. தமிழ்க் காங்கிரஸ் சார்பில் திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் அவர்களும் திரு. சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களும் அச்சட்டத்தை எதிர்த்து வாக்

களித்தனர். 1948-ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இந்திய-பாகிஸ்தான் பிரஜாவுரிமைச்சட்டம்பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட திரு. செல்வநாயகம் அவர்கள் இச் சட்டத்தை மிகவும் தீவிரமாக எதிர்த்துப் பேசும் போது கீழ்க் கண்டவாறு கூறினர்.

''இன்று இந்தியத் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. நாளை மொழிப் பிரச்சனை வரும் போது இலங்கைத்தமிழ் மக்களுக்கும் இதே கதி நேரிடும். எனவே இன்றே நாமெல்லாம் ஒன்று சேர்ந்து இவ்வநீதியை எதிர்க்க வேண்டும்'' (பாராளுமன்ற நடவடிக்கை 10-12-1948) எட்டு ஆண்டுகளின் பின் - 1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் வந்தபோது, திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் இவ்வாக்கியங்களின் தீர்க்க தரிசனத்தைத் தமிழ் மக்கள் உணர்ந்தனர். இந்திய - பாகிஸ்தானியர் பிரஜாவுரிமை சட்டவாக்கெடுப்பின்போது, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இரண்டாகப் பிளந்தது. திருவாளர்கள் பொன்னம்பலம், கனகரத்தினம், இராமலிங்கம் ஆகியோர் சட்டத்தை ஆதரித்தும்: சட்டத்தை திருவாளர்கள் செல்வநாயகம், வன்னியசிங்கம், சிவபாலன் ஆகியோர் சட்டத்தை எதிர்த்தும் வாக்களித்தனர். அன்று ஏற்பட்ட பிளவு 24 ஆண்டுகளின் பின், தமிழர் கூட்டணியில் இலங்கை. தமிழரசுக் கட்சியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும். ஒன்று சேர்ந்த போதே மறைந்தது. இக்கட்சிகள் இரண்டும் ஒன்று சேர்ந்தியந்ம் இந்த நேரத்தில் துரதிர்ஷ்டம்மிகுந்த இப்பிளவைப் பற்றிக் குறிப்பிடுவது வேதனை தருவதாக இருந்தாலும், வரலாற்றின் கோவை விடுபடாதிருப்பதற்காகக் கூற வேண்டியவர்களாயிருக்கிறோம்.

-(இன்னும் வரும்)-

---

**சிறுகதை.**

# ஒரு உள்ளம் துடிக்கிறது

யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்களாகத் தொடர்ந்து அமுலிலிருந்த ஊரடங்கு உத்தரவு நீக்கப் பெற்று சில மணி நேரம் கூடச் செல்லவில்லை. கடைத்தெரு முழுவதும் ஒரே ஜனவெள்ளம். சாப்பாட்டுக்குத்தேவையான பொருட்களை வாங்குவதில் ஜனங்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தனர். மறுபடியும் தொடர்ச்சியான ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டால் பட்டினியில் இருந்து தப்ப வேணுமே என்பது அவர்கள் ஏக்கம்.

திடீரென வீதியில் இராணுவ ஜீப்பொன்று வேகமாக வந்தது. அதன்பின்னே சுமார் முப்பது நாற்பது டாங்கிகள் பீரங்கி வண்டிகளின் உள்ளிருந்து வெளியே பாய்ந்த சிப்பாய்களைக் கண்டதும் நகர் முற்றுகையிடப்படுகிறதென மக்கள் உணரத்தொடங்கினர். அவர்களது ஊகத்தை ஊர்ஜிதம் செய்வது போல ''இராணுவம் நகரை முற்றுகையிட்டுள்ளது அனைவரும் சரணடையுங்கள். ஓட முயன்ருல் சுடப்படுவீர்கள்''என்ற அறிவிப்பை இராணுவத்தினர் விடுத்தனர்.

தங்கள் வயிற்றுப்பசிக்கு உணவுவாங்க வந்த அனைவர் முகங்களிலும் பிணக்களை தட்டியது. யாருமே அசையவில்லை. இருப்பினும் திடீரென வாகனங்களிலிருந்துகுதித்த சிப்பாய்கள் பளபளக்கும் நவீனதுப்பாக்கிகளால்சுடத் தொடங்கினர். ஊரையே அதிர வைக்கும் பயங்கர வெடிகுண்டுகளை வீசினர். அதிர்ச்சியால் செயலற்று நின்ற மக்கள் பலர் செத்து மடிந்தனர். எங்கும் மரண ஓலம். அகப்பட்டவர்களை எல்லாம் வாரிச் சுருட்டி வாகனங்களில் அள்ளிப்போட்டனர். கடைகள் சூறையாடப்பட்டன. எங்கு பார்த்தாலும் தீயின் நாக்குகள் நடனமிட்டன. பெண்கள் குழந்தைகள் நோயாளிகள் வயோதிபர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்ற பட்டை நாமத்தோடு கவசவண்டிகளில் இராணுவமுகாம்களுக்கு அள்ளிச் செல்லப்பட்டனர்.

ஊரெங்கும், கடைத்தெரு சுற்றி வளைக்கப்பட்டு பல்லாயிரம் மக்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டசெய்திகாட்டுத் தீ போல் பரவியது. அந்த வயோதிபத்தாய் அக்னஸ் வீட்டுக்கு முன் வீதியில் மக்கள் ஆரவாரப்பட்டுக் கொண்டு ஓடுவதைக் கண்டு ''என்ன எல்லாரும் ஓடுறீங்க'' என்று கேட்டார்.

''இராணுவம் கடைத்தெருவிலே பொடியள் எல்லாரையும் பிடிச்சுட்டு போருங்களாம்''

'' ஆ......என் மகன்... '' குழறியபடியே வெளிக்கதவின் நிலையோடு சாய்ந்த அக்னஸ் நெஞ்சைப் பொத்திப்பிடித்தாள். நெஞ்சைப் பிளப்பது போல இடதுபுற நெஞ்சுவலிப்பது அவளுக்குத் தெரிந்தது. உடலெல்லாம் குப்பென வியர்த்தது. அதையும் பொருட்படுத்தாமல் தள்ளாடித் தள்ளாடிப் பூஜை அறையில் இருந்த கன்னிமரியாளின் திருவுருவத்திற்கு முன்ஞல் சென்ருள் அக்னஸ்.

''தாயே... அம்மா... எனக்கு யாருமில்லே என் மகன் ஒருத்தன் தான் இருக்கிறன். அவனை இந்த இராணுவத்தினர் வசம் சிக்குப்படாமல் காப்பாற்று...'' கெஞ்சினுள் அந்தத்தாய் இறைவனிடம்.

கடிகாரமுட்கள் டக்டக் என அடித்துக் கொண்டிருந்தது. மகனைக் காணவில்லையே என அந்தத்தாய் உள்ளம் பக்பக்கெனத் துடித்துக் கொண்டிருந்தது.

''அம்மா...'' வாசலில் மகனின் குரலைக் கேட்ட அந்தத் தாய் தன் தள்ளாமையையும் மறந்து ஓடிவந்து கதவைத்திறந்தாள் ''அம்மா...''

''என் ர...ராசா...'' அப்படியே மகனைக் கட்டியணைத்து முத்தமழை பொழிந்தாள் அந்த வயோதிபத்தாய்.

''அம்மா... ஆமிக்காரன்களிட்ட இருந்து கடவுள்தான் என்னைக் காப்பாத்தினுர். நான் கடைத் தெருவுக்குள்ளே நுழையும் பொழுதே தூரத்தில் இராணுவ வாகனத்தைக் கண்டு விட்டேன். உடனே சைக்கிளையும் போட்டுட்டு அருகிலிருந்த ஆஸ்பத்திரிக்குள்ளே நுழைந்து பேஷண்ட் போல கட்டிலிலே ஏறிப்படுத்திட்டேன். அங்கிருந்த நர்சும் ரொம்ப நல்லவங்க. உடனே பெட்டிலே படுக்க வைச்சு குளுக்கோஸ் ஏத்தி விட்டாங்க. ஆஸ்பத்திரிக்குள்ளும் இராணுவத்தினர் வந்தாங்க - அங்கிருந்தவர்களேயும் பிடிச்சிட்டு போனுங்க. எங்கிட்டையும் வந்தாங்க. நர்சு அவங்க ஆபரேஷன் பண்ணின பேஷண்ட் என்று சொல்லிச் சமாளிச்சிட்டாங்க. கடவுளுடையஅருளாலே என்னை விட்டுவிட்டுப் போயிட்டாங்க'' என்றுன் மகன் கரன்,

''ராசா... கடவுளை நம்பினேரை கடவுள் கைவிடார்'' என்ற அந்தத்தாய் மறுவினடி ''ஆ...'' என்று அலறியபடியே மகனின் மேல் சாய்ந்தாள்.

''அம்மா ... என்னம்மா... என்ன...'' தாயைக் கைகளால்தாங்கியபடியே பதறினுன் கரன்.

''எனக்கு... எனக்கு பேச முடியலே......இடதுபக்க கால்......கை...யை அசை...க்க''பேச்சுத்தடுமாறுவதை உணர்ந்த கரன், அப்படியே தாயைத்தூக்கிச்சென்று கட்டிலில் வளர்த்தி விட்டு பக்கத்து ஆத்துக்காரரை உதவிக்கு கூப்பிட்டான். அவர்களைத்தாயுடன் துணைக்கு விட்டு விட்டு கார் பிடிக்க ஓடினுன்,

''பாஸ்இல்லிங்க''. வண்டிக்காரங்கசையை விரித்தனர். பாஸ் இல்லாமல் எந்த வண்டியும் யாழ்ப்பாணத்தில் ஓடக்கூடாது என்பது சிங்கள அரசின் சட்டம். மீறினுல் சூடுவிழும் என்ற அச்சத்தில் யாருமே வண்டிவிட மறுத்தனர். இதற்கிடையே திடீரெனவாெனெலியில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வருகிறது என்ற அறிவிப்பு ஒலிபரப்பாகியது. மறுகணம் கடைகளை இழுத்து மூடுபவர்களும் குடலோட்டமாய் ஓடுகிறவர்களும் காற்றுய் பறக்கின்ற மக்களுமாய் ஊரே அல்லோலப் பட்டது.

எதுவுமே செய்ய முடியாமல்சோகத்துடன் வீடுதிரும்பிய கரன், வேதனையால் துடிக்கும் தாயின் அருகே அமர்ந்து அவளை வருடிக் கொடுத்தான். அவள் மூச்செடுக்கமுடியாமல் திணறத் திணற அவனது இதயம் நொருங்கியது. அயலவர்கள் தம்மாலான கை மருந்தைச் செய்து பார்த்தனர். பலனில்லை. வெளியேமயான அமைதி. நாய்களின் குரைப்பொலியும் சிங்கள இராணுவத்தின் தடதட பூட்ஸ் ஒலியும் இடைக்கிடை எழுகின்ற துப்பாக்கி ஓசைகளும் அந்த மயான அமைதியைக் குழப்பிக் குழப்பி அனைவரையும் கிலி கொள்ளச் செய்தது.

தாயின் அருகே உட்கார்ந்திருந்த கரனின் நெஞ்சம் தன்னை தன்னுயிராக நேசித்த தன்தாய் அதுவும் தந்தை சின்னவயதிலேயே இறந்து போன பின்பு தன் உதிரத்தையே அவனுக்காகக் கொட்டிவளர்த்த தாய் வேதனையில் துடிப்பதையும் தான் எதுவுமே செய்ய இயலாது இருப்பதையும் எண்ணி இரத்தக் கண்ணீர் வடித்தது.

எப்போது விடியுமென ஏங்கிய அவன் மனதுக்கு ஆறுதளிக்குமாப்போல சூரியனின் கதிர்கள் பரவின. அவனது மனதிலும் புத்துணர்வு கரைபுரண்டது. ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் நேரமான ஆறுமணி ஒலித்ததுமே வீதியால் ஓடோடிச் சென்று அருகிலிருந்த கிறிஸ்தவப் பாதிரியாரிடம் ''பாதர் ... பாதர் ... பிளீஸ் உங்க காரை கொஞ்சம் கொடுத்துதவி எங்க அம்மாவை காப்பாத்துங்க'' ''எனக் கெஞ்சினுன் கரன். அவனது பரிதாப நிலையைப் பார்த்துத் தன்னுயிரையும் பொருட்படுத்தாமல் அந்த பாதர் காரிலே அவனின் தாயை ஏற்றிக் கொண்டு பெரியாஸ்பத்திரி நோக்கி விரைந்தார்.

டாக்டர் அவசரம் அவசரமாகப் பரி சோதித்தார்.

"டு ... லேட் ... நோய் ரொம்ப அதிக்மாயிட்டு ... என்ன செய் வது அரசாங்கத்தின் உத்தரவு அப்பாவி உயிர்களுக்கு எமனுகிறது. சரி ... சரி ... வார்டுக்கு கொண்டு போங்க" என்ருர் டாக்டர்,

அங்கு நர்ஸ்கையைப் பிசைந்தார். "சார்... சார் ... கொழும்புக்கு வாகனங்கள் ஓடாது அரசு தடுப்பதால் ஆக்சிசன் இல்லே சார்..." எனருள்.

டாக்டர் ... "மை ... காட் ... " என்ருர்.

இதற்கிடை திடீரென அக்னஸ்க்கு எங்கி ருந்தோ ஒரு வலிமை வந்தது, திக்கித் திக்கிப் பேசத் தொடங்கிஞள் "ராசா ... நான் ... கடவுளிட்ட போகப்போறன். கடவுள் வந்து என்னருகே நிற்கிருர் கூட்டிப் போகப் போருராம் உனக்காகவும்... எங்களே இப்படி எல்லாம் ... தமிழராய்ப் பிறந்துக்காக ... கொடுமைப்படுத்துகிற ... கொடிய அரசு ஒழிவதற்காகவும் நான் ...அவரிடம் போய்... பிரார்த்திப்பேன்" மூச்சுத்திணறத்திணறப் பேசிய தாயின் கண்கள் சொருகுவதைக் கண்ட கரன் அவளது தலேயைத் தன் கை களில் தாங்கிஞன். மறுவிஞடி "ப்பூ" என் ளெரு வாயோசையுடன் அவளின் தலே கரனின் கைகளில் சரிந்தது.

"அம்மா" ... கரன் வைத்த ஒலத்தில் ஆஸ் பத்திரியே அதிர்ந்தது. "அம்மா ... உன்னேக் கொன்ற அந்த கொடிய அரசை அழித்து ஒழிப்பேன் ..."ஓர் தமிழ் இளேஞனின் உறுதி மொழி ஒன்று கேட்டது. இதயமற்ற மனிதர் களால் நின்று விட்ட ஒரு இதயத்தை கண்டு துடிக்கும் ஒரு உள்ளத்தின் பேச்சொலியாக அந்த உறுமல் அங்கு பரவியது.

# போர்நிறுத்த ஒப்பந்தமும் இன்றைய நிலேயும்

இந்திய அரசாங்கத்தின் முயற்சியிஞல் உருவாக்கப்பட்டு நடை முறைப்படுத்தப்பட்டுள் ளதாக கருதப்படும் இலங்கை அரசுக்கும் தமிழீழ போராளிகளுக்கும் இடையிலான, ஆஞல் இலங்கை அரச கூலிப்படைகளால் ஆரம்பத்திலிருந்தே மீறப்பட்டுவந்த, போர் நிறுத்த ஒப்பந்தமானது தற்போது இன்ருே நாளேயோ என இறுதி மூச்சை விட்டவண்ணம் உள்ளது. இந்தக் கட்டுரையை நீங்கள் படித்துக் கொண்டிருக்கையில் இந்த ஒப்பந்தம் காலாவதியாகி காவல் படைகள் தமிழீழத்தைப் பிணக்காடக்கிய வண்ணம் இருக்கலாம். எது எப்படி இருந்த போதும் வடக்கு மாகாணத்தில், கிழக்கில் அசம்பாவிதங்கள் தொடர்ந்த போதும், ஓரளவு அமைதி நிலவுவதற்கு இது வழிவகுத்தது எனலாம்.

இரகசிய ஒப்பந்தமாகக் கருதப்பட்ட இதில் நான்கு கட்டங்கள் உள்ளன. அதன்படி

**இலங்கையின் இனப்பிரச்சனேக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அரசியல் தீர்வைக் காணும் பொருட்டு இணக்கமான சூழ்நிலே யை உருவாக்குவதற்காக சில முயற்சிகள் ஒரு பக்கத்தில் இலங்கை அரசாங்கத்தாலும், மறுபக்கம் தீவிரவாதிகளாலும் எடுக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. இரு பக்கத்தினராலும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய தொடரான நடவடிக்கைகள் கீழே தரப் பட்டுள்ளன.**

| இலங்கை அரசாங்கத்தால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை | அதற்கு இணையாக தீவிரவாதிகளின் நடவடிக்கை. |
|---|---|

### கட்டம் I-தொடக்கம் : ஜூன் 18 முதல், 3 வாரங்களுக்கு.

| | |
|---|---|
| 1. அரசாங்கம் தெருக்களையும், வாகனங்களையும் பயன்படுத்துவதை தடை செய்வதற்கான சட்டத்தை அகற்றுதலும் தடைசெய்யப்பட்ட வலயத்திற்கான அதிகாரபூர்வ நடைமுறைப்படுத்தலை நிறுத்தி வைத்தலும். | தடை செய்யப்பட்ட வலயத்தை ஆட்களையும் பொருட்களையும் கொண்டு செல்லப் பயன்படுத்துவதை நிறுத்துதல். |
| 2. புதிய குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தாமல் இடைநிறுத்துதல். | சிங்கள தமிழ் பொது மக்கள் மீதான தாக்குதல்களை வட-கிழக்குப் பகுதிகளிலும், ஏனைய பகுதிகளிலும் நிறுத்துதல். |
| 3. காவல் படைகள், தேடுதல் நடவடிக்கைகளை உள்ளூர் அதிகாரிகள், நீதிபதிகள் முன்னிலையிலேயே நடாத்துதல். | வடக்கிலும் கிழக்கிலும் நாட்டின் எந்த பகுதியிலும் அரசாங்க அலுவலகங்கள், பொருளாதார இலக்குகள், தனிப்பட்ட உடமைகள் போன்றவற்றின் மீதான தாக்குதல்களை நிறுத்துதல். |
| 4. பாதுகாப்பு வலய பிரகடனத்தை நீக்கலும் இராணுவ போலீஸ் பிரிவுகளுக்கான சாதனங்கள், சௌகரியங்களை மேலும் அதிகரித்தலை நிறுத்துதலும். | ஆட்களையும், பொருட்களையும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, இலங்கைக்கு வெளியிலிருந்து கொண்டு வருவதை நிறுத்துதல். |

### கட்டம் II : மூன்று வாரங்கள்.

| | |
|---|---|
| 1- பாதுகாப்பு படைகள் திடீர் தேடுதல்களையும் ஊரடங்கு உத்தரவுகளையும் இடைநிறுத்தல். | பாதுகாப்புப் படைகளின் அணி வகுப்பிற்கு, போலீசுக்கு எதிரான தாக்குதல்களையும், புகையிரதப் பாதை, பாலங்கள் தெருக்கள் ஆகியவற்றில் கண்ணிவெடி குண்டுகள் வைப்பதையும் நிறுத்துதல். ஆயுதங்கள் எடுத்துச் செல்லலை நிறுத்துதல். |

### கட்டம் III : இருவாரங்கள்

| | |
|---|---|
| 1. போர் நிறுத்தத்தை அவதானித்தல். | போர் நிறுத்தத்தை அவதானித்தல் |

2. மூடப்பட்ட பொலிஸ் நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டு சட்டம் ஒழுங்கை பொலிசார் நடைமுறைப் படுத்தல்.

3. சிறைப்படுத்தப் பட்டுள்ளவர்களில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாதவர்கள் மன்னித்து விடுதலை செய்யப்படல் (குற்றம் சாட்டப்பட்டவர்கள் தொடர்ந்து நடைபெறும் விவாத முடிவுகளின் பின் விடுதலை செய்யப்படல்.

## கட்டம் IV

அரசாங்கத்தின் தூதுவர்களும், தமிழ் அரசியல் தலைமை தமிழ் தீவிரவாத இயக்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கும் பிரத்தியேகமான விடயங்களில் இரகசிய பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு ஒரு அரசியல் தீர்வு காணமுற்படல் இப் பேச்சுவார்த்தை நடைபெறும் இடம் இரு பகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது மூன்றுவது நாடாக இருக்கலாம். விவாதங்களின் எந்த சந்தர்ப்பத்திலும் பேச்சுவார்த்தைகள் பற்றிய ரகசியங்கள் பாதுகாக்கப்பட, எல்லாவித முயற்சிகளும் செய்யப்பட வேண்டும். போர் நிறுத்தமும் பொது மன்னிப்பும் பிரகடனப்படுத்தப் பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அரசியல் தீர்வுக்கான ஒரு அத்திவாரம் காணப்படல். அரசாங்கத்திற்கும் தமிழர் பிரதிநிதிகளுக்கும் இடையிலான இந்த இரகசியப் பேச்சு வார்த்தைகளின் முடிவின்படி அடிப்படை திட்டத்தை முன் வைத்த பின்னர் இவர்கள் நேரடி பகிரங்கப் பேச்சு வார்த்தைகளை தொடங்கலாம்.

மிகவும் பிரசித்தி பெற்ற - இரகசியமான- முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படும் இந்த உடன் படிக்கையானது அதன் அமைப்பிலும் நடை முறைப்படுத்தலிலும் பல குறைகளைக் கொண்டுள்ளது. சாதாரண காகிதங்களில் எழுதப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் எந்தவித உத்தியோகபூர்வமான முத்திரைகளையோ, அரசாங்க இராஜதந்திர முறைக்குரிய வார்த்தைப் பிரயோகங்களையோ காண முடியவில்லை, இரண்டு தாள்களில் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தம் விடுதலை இயக்கங்களுக்கிடையில் விநியோகிக்கப்பட்டன. திம்பு பேச்சில் கலந்து கொண்ட அனைத்து தீவிரவாத இயக்கங்களும் இதை ஏற்றே திம்புவுக்குச் சென்றன. இவை எல்லாவற்றையும் விட மேலாக இந்த உடன்படிக்கையின் இறுதிக்கட்டமாகவே பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் என்றும், இது மூன்று மாத கால இறுதியில் - மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்திலுள்ள படிகள் இரு பகுதியினராலும் திருப்தியான விதத்தில் கடைப்பிடிக்கப்பட்ட பின்னர் நடைபெறும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஜூன் மாத முற்பகுதியில் போராளிகளிடம் காட்டப்பட்ட ஒப்பந்தம் எவ்வித அறிவிப்புமின்றி, கலந்து கொள்ளும் இன்றி அதே மாத நடுப்பகுதியில், ஜூன் 18ம்தேதியிலிருந்து நடைமுறைப் படுத்துவதாக அறிவிக்கப்பட்டது. இதற்கு யார் பொறுப்பு என நாம் அறியாவிட்டாலும், கூட குறிப்பிட்ட காலத்திற்கு மிக முன்னதாகவே அமுலுக்கு கொண்டு வரப் பட்டதுவும் பின்னர் இது தோல்வியடைவதற்கு ஒரு காரணமாயிருந்தது. இலங்கையின் காவல்படைகளால் ஆரம்பத்திலிருந்தே மீறப்பட்டுவந்த இந்த ஒப்பந்தமே திம்பு பேச்சு வார்த்தையில் தமிழீழப் பிரதிநிதி

களின் வெளிநடப்பிற்கும், இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தை தோல்வியடைவதற்கும் காரணமாகும். தமிழர் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்த பின்னரும் கூட இலங்கையின் தூதுக்குழுவுடன் கலந்தாலோசித்து இந்திய அரசாங்கம் வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது. இந்திய பிரதமரால் ''ஆரம்பப்பத்திரம்'' (STARTING PAPER) என வர்ணிக்கப்பட்ட இது இலங்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்பட்டு வருகிறது. இதே நேரத்தில் சர்ச்சைக்குரிய நாடுகடத்தல் உத்தரவாலும் கசப்பான சம்பவங்கள் சில வற்றாலும் விடுதலை இயக்கங்கள் சில டெல்லி சென்று பாரதப் பிரதமரை - தமிழீழ மக்களின் நலனில் என்றுமேஅக்கரையுள்ளஇந்திய அரசின் தலைவரைச் சந்திக்க முடிவெடுக்காமல் இச்சந்திப்பு பிற்போடப்பட்டு வருவதையும் காண்கிறோம். இதனால் சிறிது கோபமுற்றுள்ள இந்தியப் பிரதமரின் மனநிலையை அண்மையில் அவரது கேரள விஜயத்தின் போது பாலக்காட்டில் பேசிய பேச்சு தெளிவாக்குகிறது. இலங்கைப் பிரச்சனை தீர்க்கப்படவேண்டும், சிறீலங்காவின் அரச பயங்கரவாதம் நிறுத்தப்பட வேண்டும் என்று தெளிவாகக் கூறிய அவர் தமிழ்த்தீவிரவாதிகளின் சில செய்ல்பாடுகளையிட்டும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார். இந்திய அரசை சீண்டி, நாம் வேடிக்கை பார்கா முற்பட நினைத்தால் அது எமக்கு நன்மை தரக்கூடியதில்லை. இப்போது தமிழீழப் பகுதியில் - முக்கியமாகக் கிழக்குப் பகுதியில்அதிகரித்துவரும்இராணுவ அட்டகாசங்களைப் பார்க்கும்போதுஅவர்கள் பெரிய ஒரு திட்ட மிட்ட தாக்குதலை நடாத்தத் தயாராகி வருவதாகத் தெரிகிறது. எது எப்படியாயினும் எம்மக்களை அழிவிலிருந்து பாதுகாக்க நாம் விரைந்து, சமயோசிதமாக நடக்க வேண்டும் என்பதைஅனைத்துவிடுதலை இயக்கங்களும் உணர்ந்து செயற்பட வேண்டியது மிக அவசியமாகும்.

—அரவிந்தன்—

# கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ

காலத்திற்குக் காலம் விடுதலைப் போராட்டத்தின் வழிமுறை அதன் சூழ்நிலை இடம் ஆகியவற்றிற்கேற்ப மாறும். இது வரலாற்று நியதி. இந்த வழியில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில்வதைபடும் போராட்ட வீரர்கள் தம் உடலை வருத்தி அண்ணல் காந்தியின் அறநெறியில்-அகிம்சை வழியில் போராட்டங்களை மேற்கொள்ளத் தொடங்கினர்.

அன்று-இந்திய சுதந்திரப் போராட்டத்தின் உச்சக்கட்டமான 1929ல் ''அடக்குமுறையும், அவசரச் சட்டங்களும் புரட்சி உணர்வுகளை ஒரு போதும் அடக்கிவிட முடியாது'' என பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு உணர்த்த மத்திய சட்டசபையில் குண்டுகளை வீசிய பகத்சிங் - தோழர்கள் லாகூர் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டனர். தங்களை அரசியல் கைதிகளாக நடத்த வேண்டும், சாதாரண குற்றவாளிகளிடமிருந்து எங்களை வேறுபடுத்த வேண்டுமென அங்கிருந்த விடுதலை வீரர்கள் போராடத் தொடங்கினர். வங்காள வீரர் ஜதீந்திரநாத்தாஸ்- இப்போராட்ட இறுதி முடிவுவரை போராடி - வீர மரணமடைந்தார், 63 நாட்கள் உண்ணா விரதத்தில் தன்னை வருத்தி ஈடுபட்ட இவரது மரணம் இந்தியாவையே உலுக்கியது. வெள்ளை ஏகாதிபத்தியம் அடிபணிந்து போராட்ட வீரர்களுக்கு சிறைச்சாலையில் அரசியல் அந்தஸ்து கொடுத்தது.

அடுத்து அயர்லாந்திலே ஒரு அமைதிப் புரட்சி, அந்த சிறைச்சாலையின் அறையொன்றில் கிழிந்த நாராய் ஓர் உருவம் உறங்குகிறது. அவன் வேறுயாருமல்ல, ஆங்கில அரசை ஆயுதந்தாங்கி எதிர்த்த- அயர்லாந்து குடியரசுப் படை (I. R. A.) வீரன் ''பொபிசான்ட்ஸ்'' தான். அருகிலேயே அவன் அன்னையை உடனிருக்க அனுமதித்து அவன் உண்ணாவிரதத்தை நிறுத்த முனைந்த போதிலும் அந்த வீரத்தாய் தன் மகனின் போராட்டத்திற்கு அருந்துணையாக இருந்து அவன் இறப்பைக் கூட அஞ்சா நெஞ்சுடன் எதிர் கொண்டாள்.

**இங்கே**-முன்னாள் பிரதமர் பண்டார நாயக்கா, தீவிரவாதிகள் என சந்தேகித்து பல இளைஞர்களை தன் காலத்தில் சிறைக் கொட்டடிகளில் அடைத்தார். 1976 ல் அணிசேரா நாடுகளின் 5வது மாநாடு கொழும்பில் நடந்த நேரம் சிங்கள அரசு தங்களை நீதி விசாரணைக்குட்படுத்த வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர் நம் மறத்தமிழர். மாவை சேனாதிராஜா, காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன் ஆகியோர் தலைமையில் போராட்டம் தொடர்ந்தது. வாயினாலும், மூக்கினாலும் உணவை வலுக்கட்டாயமாகப் புகட்ட முற்பட்டனர் சிறையதிகாரிகள். அதுவே ஒரு பெரிய சித்திரை வதையாகப்பட்டது, அப்போராட்ட வீரர்களுக்கு. சிங்கள அரசின் புறக்கணிப்பை உணர்ந்த தந்தை செல்வா சிறையில் போராட்டம் மேற்கொண்டிருந்த இளைஞர் தலைவர்களுக்கு உண்ணாவிரதத்தை முடிக்கும் படி உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார். தலைமைக்கு மதிப்பளித்து 18நாளாக நடந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

**இப்போது** எங்கள் கண்ணெதிரிலேயே தமிழீழக் கண்மணிகள் சிங்களச் சிறைச் சாலையில்-குட்டிமணி உயிர் குடித்த வெலிக் கடையில் வெறிநாய்களுக்கிடையில் உண்ணா விரதம் மேற்கொண்டுள்ளனர். கடந்த 30 நாட்களாக தொடர்ந்து பசியில் வாடிப் பலயீனமாகியும் கூட உறுதிகுலையா நெஞ்சுடன் உண்ணாவிரதம் மேற்கொண்டவண்ணம் இருக்கின்றனர்- விடுதலை வீரர்கள். கைது செய்யப்பட்டது முதலாய் சிங்களச்சிப்பாய்களால் சின்னாபின்னப்படுத்தப்பட்ட இளைஞர்கள்"எங்கள் மேல் குற்றமிருப்பின் நீதி மன்றத்தில் நிறுத்துங்கள் அல்லது விடுதலை செய்யுங்கள்" என அறைகூவல் விடுத்தே இப்போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

பன்னிரண்டு இளைஞர்களால் கடந்த நாற்பது நாட்களாக மேற்கொள்ளப்படும் இந்த உண்ணாவிரதத்தில்-தமிழீழமே பங்கு பற்றியவாறுள்ளது. ஆம் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் பல்கலைக்கழக மாணவர்களும், பொதுமக்கள் பலரும் ஆயிரக்கணக்கில் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர். சிறையில் வாடும் நம் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவிக்க அவர்களுக்குத் தெரிந்த வழி இதுதான்.

கிரிமினல் குற்றவாளிகளாலும் தாக்கப்படும் இவர்கள் கோரிக்கையை அரசாங்கம் கவனிக்குமோ இல்லையோ நிச்சயமாக தமிழீழ வரலாற்றில் மேலும் ஒரு தனி அத்தியாயம் - தியாக வரலாற்றின் தீரம் எழுதப்பட்டு வருகிறது என்பது உறுதி.

இவ்வுண்ணாவிரதத்தை மேற்கொண்டு வரும் போராளிகளில் இறுதியாக தியாக தீபங்கள் அணைந்துவிட்டன இவர்கட்கு, எமது வீர அஞ்சலியை செலுத்துகின்றோம்.

## சென்னையில் ஓர் அஞ்சலிக் கூட்டம்.

*13—09—85 அன்று சென்னையில் நடந்த கூட்ட உரைகளிலிருந்து சில பகுதிகள்*

ஃ தமிழின விடுதலைக்கு 30 ஆண்டுகள் முன் நின்று உழைத்தவர்கள், சுதந்திர விதையை இதய சுத்தியோடு விதைத்தவர்கள், இன்று வீதியிலே பிணமாக வீழ்ந்துகிடக்கின்றனர். நம்மவர்கள்தான் இதைச் செய்தார்கள் என்பதில் எமக்குச் சந்தேகமில்லை. எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள நாம் ஆயத்தமில்லை.

ஃ இப்படுபாதக செயலை செய்தவர்களை "ஏவி விட்ட தீயசக்திகள் எது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்,

ஃ தமிழீழ விதையை விதைத்தவர்கள், கனியைப்பறிக்கும் தருணத்தில் எம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டனர்.

ஃ உங்கள் அனைவருக்கும் தெரியும் யார் இதைச்செய்தார்கள் என்று. த. வி. கூட்டணியை பயமுறுத்தவே இது நடந்துள்ளது என்று பலர் எங்களிடம் கூறியுள்ளனர். துப்பாக்கிக்குண்டுகட்கு அஞ்சுபவர்கள் அல்ல நாங்கள். அப்படி பயந்தவர்களாயிருந்தால் நாம் எப்போதோ களத்தைவிட்டு ஓடிஇருப்போம். தமிழனை தமிழன் மிரட்டும் நிலை தொடரக் கூடாது. இந்நிலையை உருவாக்குபவர்கள் இலட்சியத்தை மறந்தவர்களாகவே கருதப்படுவார்கள்.

**திரு. அ. அமிர்தலிங்கம்**
(செயலாளர் நாயகம், தமிழர் விடுதலைக் கூட்டணி)

ஃ அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்த கெரில்லாப் போராட்ட முறையைக் கண்டித்து வந்த நாங்கள், ஏதோ ஒரு இயக்கம் நடத்துகிறது என்பதற்காகக் கண்டிக்கவில்லை. மக்களை அணித்திரட்டாமல், எம்மை பலப்படுத்தாமல் எதிரி போடுகின்ற வலையிலே, எம்மைஆத்திரப் படுத்தி- வம்புக்கு போராட்டத்திற்கு இழுக்கும் இந்த வலையிலே நாம் சிக்கி விடாமல் எமது போராட்டத்தைநிதான மாக, உறுதியாக கொண்டுச் செல்ல வேண்டிய காரணம் இருந்தது. இந்த அடிப்படையில்தான் போர் நிறுத்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக் கொண்டோம்.

ஃ தனிப்பட்ட 'லெட்டர் பாட்களை' வைத்துக் கொண்டு எந்த இயக்கங்களையோ, மக்களையோ சந்திக்காதவர்கள் தமிழீழம் தான் முடிந்த முடிவு என அறிக்கை விடுக்கிறார்கள். இவர்கள் எப்படி தழமிழீத்தைக்காணப்போகிறார்கள். ஆராய்ச்சி மூலமா? எனக் கேள்வி எழுகிறது,

ஃ உலக நாடுகள் மத்தியில் நாம் தலை குனிந்து நிற்குமாறும், இந்தியா அரசாங்கத்தின் விரோதிகளாக்கப்படும் நிலையையும் யார் ஆக்கினார்கள் ? இதை திட்டமிட்டுச் செய்தவர்கள் யார்? இவர்கள் வெளியேற்றப் படுகிறார்கள்: இவர்கள் நிலைமை புரிகின்றது. அப்போது அங்கே கொலை நடக்கின்றது. மீண்டும் இவர்கள் தலைவர்களாக்கப்பட முயற்சி நடைபெறுகிறது. 'அறிக்கை மன்னர்கள்' தலைமை தாங்குகிறார்கள், மக்களின் வாழ்வுக்காக அன்றாடம் ஓடித்திரிந்து அங்குள்ள முற்போக்கு சக்திகளை இணைத்து, இன்றிருக்கும் சிங்கள பாசிஸ முதலாளித்துவ சக்தியை எதிர்த்து மக்கள் மத்தியிலே உழைத்ததலைவன் சுட்டுக் கொல்லப்பட்டுதுரோகப்பட்டம் சூட்டப்படுகின்றான். ஜெயவர்த்தனாவின் ஆட்சி பீடத்தை அலங்கரித்தவன், இன்னும் அவன் தொழிற் சங்கத்தின் உப தலைவனாக இருப்பவன் பேச்சு வார்த்தையிலே தமிழீழத்திற்காகக் குரல் கொடுக்கின்றான்.

ஃ துப்பாக்கி ஏந்துவது எமது விடுதலையை சாதிப்பதற்காகவே தவிர துப்பாக்கி ஏந்துவதற்காக நாம் விடுதலையை முன்னெடுத்துச் செல்லவில்லை.

**தோழர் முகுந்தன்**
செயலதிபர்
தமிழீழ மக்கள் விடுதலை கழகம்.

ஃ நாம் செய்த தவறுக்காக, நம்மவர்கள் செய்த தவறுக்கு நாம் தலை குனிந்து நிற்கின்றோம் இப்படி செய்வதின் மூலம் உலக நாடுகள் எம்மைப் பார்த்து சிரிக்கின்றன. எந்த காலத்திலும் நியாயப் படுத்த முடியாத கொலைகள். இந்த துரோகம் இத்துடன் முற்றுப் பெற வேண்டும். அன்றுமுதல் - நெருக்கடிகளின் மத்தியிலும் தமிழ் ஈழப் போராட்டத்திற்கு முழு ஆதரவு கொடுத்தவர்கள் என்ற முறையில் சொல்கிறோம். உங்களுக்கு இப்படிக் கொலை கார எண்ணம் தோன்றியிருக்குமாயின் நீங்கள் முதலில் கொலை செய்ய வேண்டியது எங்களைத் தானே தவிர அந்தத் தூய தலைவர்களை அல்ல.

ஃ ஈழத் தமிழன்எப்பொழுதுமே பெருமைப் பட்டுக் கொள்ளலாம் - அவன் தலைவர்கள்நேர்மையானவர்கள், கண்ணியம் மிக்கவர்கள், கொள்கை தவறாதவர்கள் என. அப்படிப்பட்ட தலைவர்களுக்கெதிராகவே துப்பாக்கி உயர்த்தப்பட்டிருக்கிறது என்றால் இப் படுகொலைகள் கண்டிக்கப்பட வேண்டியவை, இனித் தொடரக் கூடாதவை.

**- டாக்டர் ஜனார்த்தனன்,**
(தலைவர், உலகத்தமிழ் இளைஞர் பேரவை)

ஃ இதைச் செய்த கொலைகாரர்கள் தமிழீழத் தேசியத்தலைமையை அழிக்க முற்பட்ட சக்திகளே எனக்கருதுகிறேன்.

ஃ திம்பு பேச்சுவார்த்தைக்கு முதலாவது முறையாகச் சென்ற போதே - அங்கு வைத்தே எமக்கு தெரியும் - திரு. தர்மலிங்கம் அவர்களுக்கு எமது திம்புப் பிரதிநிதியான சித்தார்த்தன் தந்தைக்கு ஏதாவது நடக்கலாம் என. அங்கிருந்தே சென்னையினூடாக தமிழீழத்தில் முன்னவதானங்கள் எடுக்கும்படி-அவரிடமுள்ள விலை மதிப்பில்லாத புத்தகங்களையும் ஆவணங்களையும், பாதுகாக்கும்படி செய்தி யனுப்பினோம். ஆனால் நாம் அவர் உயிருக்கு குறிவைக்கப்படும் என சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

ஃ அண்ணன் அமிர்தலிங்கம் சொன்னார் நம்மவர்கள்தான் இக்கொலையைச் செய்தார்கள் என. நான்ஒருபடி மேலேபோய் சொல்கிறேன், திம்புப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட ஆறு இயக்கங்களில் ஒன்றுதான் - ஈழ தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த நான்கு இயக்கங்களில் ஒன்றுதான் செய்துள்ளது என பகிரங்கமாகச் சொல்கிறேன்.

**- தோழர் வாசுதேவா**
(தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம்)

இந்திய அரசின் முயற்சியால் ஒரு அரசியல் தீர்வுக்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் மிகவும் சர்ச்சைக்குரிய விடயமாகக் கருதப்படுவது வட-கிழக்கு மாகாணங்களை, தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை இணைத்து சுயாட்சி பெற்ற ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வருவது தான், இதை விடுத்து ஓர் அரசியல் தீர்வு எனப்படுவது எந்தக் காலத்திலும் சாத்தியமில்லாதது - ஏற்றுக் கொள்ள முடியாதது. ஜெயவர்த்தனவும், சிங்கள அரசும் எத்தனையோ காரணங்களைக் காட்டி வடகிழக்கின் இணைப்பைத் தடுக்க முற்பட்டாலும்கூட கிழக்கு மாகாணமும் ஈழத் தமிழரின் பாரம்பரிய பிரதேசமே என்பதற்கு தகுந்த ஆதாரங்களை கீழே தருகிறோம். வணபிதா ஜே. ஜோசப்மேரியின் ஆங்கில கட்டுரையைத் தழுவியது.

# கிழக்கு மாகாணம் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசமே !

— வண. பிதா. ஜே. ஜோசப் மேரி —

திருகோணமலை மாவட்டமும் மட்டக்களப்பு மாவட்டமும் (1963ல் உருவாக்கப்பட்ட தற்போதைய அம்பாறை மாவட்டத்தையும் சேர்த்து) தமிழர்களின் பாரம்பரியப்பிரதேசமே என்று வரலாறு நிறுவும் உண்மையை 'கிளகோர்ன்' அறிக்கை தெளிவுபடுத்துகிறது. பிரிட்டிஷ் ஆட்சியினர் 1795ல் டச்சுக்காரரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றிய போது தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் பற்றிய நிலைமை இதுவாகத்தானிருந்தது.

1799 ல் இலங்கையின் நீதி, நிருவாகம், வருவாய் ஆகியன தொடர்பாக திரு கிளகோர்ன் அறிக்கை சமர்ப்பித்தபோது, தாங்கள் கைப்பற்றிய தேசத்தின் குடிமக்கள் பற்றிக் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

''இந்நாட்டின் சுதேசியக் குடிகள் மிகப் பழங்காலம் தொட்டே இரண்டு வேறுபட்ட தேசங்கள் என்ற வகையில் இத்தீவினை பிரிவுபடுத்தியுள்ளனர். முதலாவதாக, வளவகங்கையிலிருந்து சிலாபம் வரை இத்தீவின் தெற்கு, மேற்குப் பகுதிகளில் வாழும் சிங்களவர்கள். இரண்டாவதாக மலபார்காரர் எனப்படும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்பவர்கள். இந்த இரண்டு தேசங்களும் தமது மொழியிலும், சமயத்திலும், பழக்க வழக்கங்களிலும் வேறுபட்டனவாகும்.'' (மலபார்கள் என்பது தமிழர்களைக் குறிக்கும்)

கிழக்குக் கரையோரமாக மலபார்கள் (தமிழர்கள்) வாழ்ந்து வருவதைப்பற்றி கிளகோர்ன் குறிப்பிடுவதைக் கவனிக்கவும்.

பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளர்களின் வருகைக்கு முன்னதேயே கண்டிய அரசானது கிழக்கு மாகாணத்தை பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசம் என்றேகருதியிருந்தது. டொனமூர் ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கும் போது கண்டியர்கள் இந்த நிலைப்பாட்டினையே கொண்டிருந்தனர். 1815ம் ஆண்டிற்குப் பின்னரே கண்டிய அரசு பிரிட்டிஷ் முடியாட்சியுடன் இணைக்கப்பட்டது. ''இலங்கை முடியாட்சிக்குள் பழைய கண்டிய அரசைக் கொண்டு வந்தமைதான் பிரிட்டிஷார் எதிர்நோக்கிய மிகச்சிக்கலான நிர்வாகப் பிரச்சினையாக இருந்தது'' என்று கே. எம். டி. சில்வா தனது ''இலங்கை வரலாறு'' என்ற நூலில் குறிப்பிடுகிறார். கண்டிய உடன்படிக்கை விதிகளின்படி, மக்களிடையே வேரூன்றி விட்டதும் நடை முறையில் உள்ளதுமான சட்டங்கள், ஸ்தாபனங்கள், வழக்கங்கள் என்பனவற்றுக்கிணங்க பாரம்பரிய நிர்வாக முறையினை அதிக மாற்றம் எதுவும் இல்லாமல் தொடர்ந்து பேணி வருவதற்கு பிரிட்டிஷார் இணக்கம் தெரிவித்திருந்ததாக திரு. சில்வா மேலும் கூறுகிறார்.

இந்த உடன்படிக்கையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உள்ளார்ந்த உரிமை பற்றிய பிரகடனமும் மிக நுட்பமாகச் சேர்க்கப்பட்டிருந்தது. எங்கெங்கே அவசியம்என்றுஉணரப்படுகிறதோ அங்கெல்லாம் அவை பொதுவானவையோ - பிரத்தியேகமானவையோ மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கும்சீர்திருத்தங்களின் துஷ்பிரயோகங்களை நீக்குதற்கும் அரசின் உள்ளார்ந்த உரிமையை இது வலியுறுத்தியது. கண்டிய உடன்படிக்கையின் இந்தப்பின்னைய வாசகமே உண்மையில் கண்டிய மாகாணங்களில் பிரிட்டிஷாரின் சட்ட ஆதிக்க எல்லையின் மூலாதாரமாகவும். கண்டியச்சட்டம் மற்றும் நீதித்துறை ஸ்தாபனம் ஆகியவற்றைப் பல வழிகளில் மேவிச் செல்வதற்கான வழிமுறையாகவும் திகழ்ந்தது.

பிரிட்டிஷாருடன் கண்டியப் பிரதானிகள் 1815-ல் செய்து கொண்ட உடன்படிக்கை விதிகளையும் ஒப்பந்தத்தினையும் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளர்கள் பின்னுளில் மீறிநடந்த போது அதிருப்தியுற்ற கண்டியர் 1929-ல் டொனமூர் ஆணைக்குழுவின் முன் ஒரு தீர்வினை விதைந்துரைத்தனர். இதுபற்றி கே. எம். டி. சில்வா கூறுவதாவது :

''செல்வாக்கு மிகுந்த கண்டிய அரசியல் ஸ்தாபனமான கண்டிய தேசியச்சங்கமானது (KANDYAN NATIONAL ASSOCIATION) இலங்கைக்கு சமஷ்டி அரசியல் அமைப்பே உகந்தது என்பதை வலியுறுத்தியது. 1833-ல் பிரிட்டிஷ் அரசுடன் கண்டிய அரசு பூரணமாக ஒருங்கிணைக்கபட்டதன் நேரடி விளைவு தான் கண்டியர்கள் தற்போது அநுபவித்து வரும் சகல கஷ்டங்களுமாகும் என்ற தங்களின் முடிவினையும் வலியுறுத்தினர். இலங்கையர் இனம் என்பதை ஒரே இனமக்கள் கொண்டதாகக் கருதி,இலங்கை மக்களின் அரசியல் முன்னேற்றம் என்ற விஷயத்தை இந்த ஒரே இனத்தின் பிரச்சினையாகக் கருதியமை தான்பிரிட்டிஷ் அரசியல் மேதைமையின் மிகவும் அடிப்படையான தவறு என்றும் அவர்கள் மேலும்வாதாடினூர்.''

இலங்கை மக்களை, ஒரே இனமக்களையே கொண்ட இலங்கையதாக பிரிட்டிஷார் கருதியது தவறு என்று கண்டியச்சிங்களப் பிரதானிகள் குற்றம் சுமத்துவதைக் கவனிக்கவும். அண்மைக் காலம் வரையிலும் கூட திருக்கோணமலையையும் மட்டக்களப்பையும் உள்ளடக்கிய கிழக்கு மாகாணம் வரை விஸ்தரித்திருந்த ஆட்சியையும், தங்களுக்கென்று ஓர் அரசனையும், ஆட்சிப்பிரதேசத்தையும் கொண்டிருந்த கண்டியர்கள் இலங்கை ஒரே தன்மைத்தான அல்லது ஒரே இனமக்களைக் கொண்டதல்ல என்ற உண்மையை ஏற்றுக் கொண்டு அதனை அதிகார பூர்வமாக அறிவித்துமுள்ளனர். சிங்கள இனம் மட்டுமே இலங்கையின் தேசிய இனம்என்று கூறுபவர்கள் தங்களது சிங்கள முன்னோர்கள் கூறுவதைக் கருத்தில் கொள்வது பயனுள்ளதாக இருக்கும். இனி, பல இனமக்களைக் கொண்ட இந்த நாட்டிற்கு கண்டியர்கள் முன்வைத்த தீர்வு தான் என்ன? இம்மேற்கோளை நோக்குவோம்

''இப்பிரச்சினைகளுக்குரிய தீர்வாக கண்டியப்பிரதானிகள் இலங்கையை மூன்று தன்னுட்சிப் பிரதேசங்களாகப் பிரித்திடும் திட்டத்தினை முன் வைத்தனர்.

1. தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள்.
2. கண்டிய மாகாணம்.
3. கரையோரச் சிங்களவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட தெற்கு, மேற்கு மாகாணங்கள்.

இந்த மூன்று சமூகத்தினரும் தத்தமக்கென சொந்தமான அரசாங்கத்தினை அநுபவிப்பர். முழுத்தீவினதும் நலன்களைப் பாதிக்கும் விவகாரங்களைப் பொறுத்தவரையில் இந்த மூன்று அரசாங்கங்களும் ஒரு சமஷ்டி அரசாங்கமாக இணைந்து குறிக்கப்பட்ட ஒரு பிரிவினர் மற்ற பிரிவின் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலைமைகள் உருவாகாமல் தடுக்கலாம்.''

கிழக்கு மாகாணத்தைப் பிரித்தல், மூன்று சமூகத்தினர், தனித்தனி அரசாங்கம் ஆகிய வார்த்தைப் பிரயோகங்களைக் கவனிக்கவும்.

இந்தத் தீர்மானத்தின் நோக்கம் எந்த ஒரு பிரிவும் மற்ற பிரிவினர் மீது மேலாதிக்கம் செலுத்தக் கூடிய ஓர் நிலையைத் தடுப்பதாகும். ஓர் ராஜ்ஜியத்தைக் கொண்டு நடத்திய அநுபவம்-அநுபவப் பொது அறிவிலிருந்து இந்த மேலான சிந்தனை பிறக்கிறது. கண்டியர்களின் பிரத்தியேகப் பிரச்சினை தொடர்பாகக் கண்டியச் சிங்களவர்களே முன்வைத்த ஒரு தீர்வின் போது ''தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் கிழக்கு மாகாணம்'' என்று சிங்களவர்களே அதுவும் விசேஷமாகக் கண்டியச் சிங்களவர்களே சான்று கூறுவது நுணுகி நோக்கத்தக்கது.

—(~~இன்னும் வரும்~~)—

20ம் பக்கம் பார்க்க

# பாரதத்தை விட்டு வெளியேற்றப்பட்ட மூன்று பிரமுகர்கள்

## இவர்களைப்பற்றி "நியூஸ் ருடே" (செப்டம்பர்) இதழில் வெளியான தலையாங்கத்தின் சிலபகுதிகள்

இந்தியாவுக்கோ, இலங்கைக்கோமாத்திரம் சொந்தமற்ற தமிழ் இலட்சியத்தின் "புதுக் கதாநாயகன்" சுகமான உடலோடும், வீருன மூச்சோடும், திரும்பி விட்டார். மத்திய ஆட்சியிலுள்ள அரசியல் தலைவர்கள் எரிச்சலடையும் வகையில், இந்தக் கதாநாயகனை உருவாக்கும் காரியத்தைச் செய்து முடித்த உள்நாட்டமைச்சின் அதிகாரிகள் தம்மைத் தாமே பாராட்டிக் கொள்ளலாம். ஒரு பிழை நடந்து விட்டதாக வலுவாகக் கூறப்பட்டால் அதைத் திருத்துவதற்கு உள்ள தமது ஜனநாயக மதச்சார்பை, வளைந்து கொடுக்கும் தன்மையை நிரூபிப்பதற்கு இன்னொரு சந்தர்ப்பம் பாரதப் பிரதமருக்கு அளிக்கப்பட்டு உள்ளது. தனக்கும் இன்னும் பலருக்கும் புகலிடம் கொடுத்த ஒரு ஜனநாயக அரசின் சர்வாதிகாரக் கட்டளையை வெற்றிகரகமாக எதிர்த்த திருப்தி, ஏன் ? மகிழ்ச்சிப் பெருக்கு திரு. சந்திரகாசனுக்கு கிடைத்துள்ளது.

இலங்கை ஜனாதிபதியால் வழங்கப்பட்ட கடவுச் சீட்டோடும், முறையான நுழைவு அனுமதியோடும், இந்தியாவில் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்ட-பின் பிரதமர் ராஜீவ் காந்தி எதுவாக இருந்தாலும் அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு, எடுக்கும் முயற்சிகளுக்கு ஆட்சேபனை தெரிவிக்காது, ஈழத்துக்கான தனது போரைத் தொடர்ந்து நடத்துவேன் என்று, "அதிவீரமாகக்" கூறியுள்ளார். இந்த நாட்டிலிருந்து இலங்கை அரசுக்கு ஈழத்திற்காக தான் நடத்தும் போருக்கும், இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியின் தூதராகவும், பிரதான சமரசப் பேச்சாரளராகவும் இருக்கும் ஹெக்டர். ஜெயவர்த்தனவுடன் பொருத்தமான சொற்களால் நடத்தும் போராட்டமான முயற்சிகளுக்கும் முரண்பாடு ஏற்படாமல் எப்படிப் பார்த்துக் கொள்வதென்பது அவருக்கே தெரியும். எப்படியாயினும் ஒரு கட்டுக் கதையின் முடிவில் சொல்வதைப் போல் நன்மையாக முடிபவையெல்லாம் நல்லவையே. திரு. சந்திரகாசன் தனிப்பட்ட முறையில் தமக்கு வெற்றிக்கு வழி, கோபமூட்டி நாடுகடத்தப்படுவது அல்ல என விரைவில் உணர்வார் என நம்புகிறேன். தமிழ் மக்களின் இலட்சியத்தைப் பொறுத்தவரை அதைக் கவனிக்கக் கூடியவர்கள் போதுமான எண்ணிக்கையில் உள்ளனர்.

திரு. சந்திரகாசனுக்கு எதிரான நாடுகடத்தல் உத்தரவு. அவர் பிரதமருக்குக் கொடுத்த வேண்டுகோளின் பேரிலும் உறுதிமொழியின் பேரிலுமே ரத்து செய்யப்பட்டதென்பதைவருங்கால!சந்ததிக்காக அல்லஇன்றைய தர்க்கத்திற்காகக் குறிப்பிட வேண்டியுள்ளது. அவர் தன்னை இந்தியாவில் இருப்பதற்கு அனுமதிக்குமாறு வேண்டுகோள் விடுத்து இலங்கையின் இனப்பிரச்சனைக்கு ஒரு நிலையான தீர்வு காண பிரதமர் எடுக்கும் முயற்சிகளில் தான் பூரண நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் உறுதியளித்தார். அதற்கு முன்னர் நியூயோர்க்கில், தான் ராஜீவ் காந்தியின் தாயார் மீதும் நம்பிக்கை கொண்டதாகவும், எப்போதும் இந்தியாவின் நண்பனாகவே இருந்திருப்பதாகவும் கூறியிருந்தார். தனக்கும், ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இந்திய மண்ணில் புகலிடம் அளித்த இந்திய அரசாங்கத்திற்கு நன்றி கூறிவிட்டு அவர் "இந்திய அரசாங்கத்திற்கு எந்தவிதமான சங்கடத்தையும் ஏற்படுத்தும், எண்ணம் எனக்கு இல்லை என வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்" என்று கூறியிருந்தார். சம்பந்தப்பட்டவர்களுக்கிடையில் இப்போது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தையில் அவர் நேரடியாக ஈடுபடாத காரணத்தினால் அவருக்கு வசதியற்ற சூழ்நிலையில் கொடுக்கப்பட்டதாயினும்தமது உறுதிப்படுத்தப்பட்ட வாக்கைக் காத்து நடப்பார் என எதிர்பார்க்கிறோம்.

ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் அங்கமான நாலு இயக்கங்களில் ஒன்ருன தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் டாக்டர். ஏ. எஸ். பாலசிங்கத்திற்கும் இந்திய அரசு இதே சலுகையை வழங்கும் என்று நாம் நம்புகின்ருேம். அவருடைய விடயத்தில் இழைக்கப்பட்டுள்ளது என்றே கருதுகின்ருேம். பிரதமருக்கு வேண்டுகோள் - தீர்வுக்கு மந்திரத் திறவுகோலாயி... தமிழீழ விடுதலைப் புலிகளின் மூளை அல்லது ஆலோசகரிடமிருந்து அவ் வேண்டுகோள் வந்து விட்டது. பேச்சுவார்த்தை நடக்கும் போதே தமிழ்மக்கள் கொல்லப்பட்டதை - யொட்டி தான் கவலையடைந்திருப்பதாக அவர் கூறியிருக்கிருர். மேலும் "எமது மக்கள் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சனைகளுக்கு ஒரு நியாயமான தீர்வு காண்பதற்கு பிரதமர் தன்னுலியன்றதை எல்லாம் செய்வார் என்பதில் நாங்கள் அவர் மீது பரிபூரண நம்பிக்கை வைத்திருக்கிருேம். பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு அவர் மேற்கொள்ளும் உண்மையான முயற்சிகளுக்கு எங்களுடைய முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் கொடுப்போம் என்று பிரதமருக்கு உறுதி அளிக்கின்றேன்" என்று அவர் கூறியுள்ளார். இந்தக் கனவானுக்கு சந்திரகாசனுக்குச் காட்டிய அதே சலுகையை காட்டுவதற்கு பொருத்தமான நேரம் இதுவே.

நாடு கடத்தலுக்குட் படுத்தப்பட்ட மூன்ருவது நபர் திரு. சத்தியேந்திரா - விடயம் முற்றிலும் வித்தியாசமான நிலைப்பாடுடையது. இந்தக் கனவானை திம்பு இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கு அனுப்பிய தவறுதலான முடிவினை மறு பரிசீலனை செய்யும்படி ஈழம் தேசிய விடுதலை முன்னணிக்கு ஆலோசனை சொல்கிருேம். ஜனதிபதி ஜெயவர்த்தனவின், இனப்படுகொலைக்குக் காரணமான ஈவிரக்கமற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் உண்மையான இயக்கங்களுக்கிடையில் யாருடைய சூழ்ச்சியினுல் இவர் நுழைக்கப்பட்டார் என்பதன் பின்னணியை மிகவும் கவனமாக ஆராய வேண்டியுள்ளது.

எங்களுக்குக் கிடைத்த உறுதிப்படுத்தப்பட்ட செய்திகளின்படி, இக் கனவான் பத்து வருடத்திற்கும் குறைவான காலத்தினுள்ளேயே, இலங்கையில் உள்நாட்டு அரசியலில் ஐக்கிய தேசியக் கட்சியை மிகவும் தீவிரமாக ஆதரித்து வந்தவர், 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இவர் தற்போதைய அமைச்சரான "காமினி திச நாயக்கா"வுக்கு வாக்கு எண்ணிக்கை முகவராக இருந்தார். 1977 தேர்தலின் பின் ஐக்கிய தேசியக் கட்சி அரசில் தொழில் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய இவர்தான் இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தின் வேலை நிறுத்தத்திற்கான உரிமையை அழித்தொழிக்கும் "பொது அத்தியாவசிய சேவைச் சட்டத்தின் தந்தையாவார். இந்த சட்டத்தை எதிர்த்து, வாபஸ் வாங்கக் கோரி பாராளுமன்றத்தின் உள்ளும், வெளியும் திரு. தொண்டமான், திரு அமிர்தலிங்கம் போன்ருேர் கடுமையாகப் போராடினர்கள். திரு சத்தியேந்திரா இலங்கையின் புதிய அரசியல் அமைப்பின் வெளிப்படையாகவும், அதி தீவிரமாகவும் ஆதரித்தவராவார். இவர் இலங்கை அரசின் செய்திப் பத்திரிகைகளில் பல பகுதிகளைக் கொண்ட கட்டுரைகள் எழுதினர். அவற்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் சாணக்கியத்தையும் அரசியல் அறிவையும் புகழ்ந்தும், ஜனதிபதி ஆதிக்க முறையைக் கொண்டு வந்த தன் மூறம் பல காலமாகத் தீர்க்கப்பாடாமல் இருந்த தமிழர் பிரச்சனையை தீர்த்ததாகவும் பல பாராட்டுகளைத் தெரிவித்து எழுதியுள்ளார். திம்புவிலும் கூட இவர் இந்திய அரசு தமிழ் இளைஞர்களை உற்சாகப்படுத்துவதாகவும் இதனல் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதாகவும் கூறினர். இதே பல்லவியைத்தான் ஜெயவர்த்தனவும் அண்மைக்காலம் வரை திரும்பத்திரும்பக் கூறிய வண்ணம் இருந்தார். இப்படிப்பட்ட பின்னணிகளைக் கொண்ட ஒரு நபர் ஒரே இரவில் தமிழ் மக்களின் போராட்ட வீரராக வருவது அற்புதங்களில் ஒன்று. ஆனல் யதார்த்தமான அரசியலில் இப்படிப்பட்ட அற்புதங்களில் தங்கியிருப்பது அல்லது பலனை எதிர்பார்ப்பது எல்லையில்லா முட்டாள்தனமாகும். இந்த முன்னுள், கொழும்பு "யூனியன் கார்னபட்" கம்பெனியின் நிர்வாக இயக்குனருக்கு, ஒரு நிலையற்ற கொள்கையுடையவராக இருக்க அவருக்கு நிலையான உரிமை உள்ளது, ஆனல் ஈழ தேசிய விடுதலை முன்னணியைப் பொறுத்த வரை, அவர்கள் இப்படிப்பட்ட ஈழத் தமிழரின் துன்பங்கள் தொடர வேண்டும்

என்ற நோக்குடைய ஊடுருவும் 'கையாட்களின் சொல் கேட்டு நடப்பவர்கள் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தாமல் இருப்பது அவசியம்.

17ம் பக்க தொடர்

வேறுவார்த்தைகளில் கூறுவதானல் திருகோணமலை மாவட்டமும் மட்டக்களப்பு மாவட்டமும் பாரம்பரியத் தமிழ்ப்பிரதேசங்களாகும். திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்ட பின்னரும், 1963ல் முன்னைய மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாறை மாவட்டத்தை தனியாகப் பிரித்தெடுத்தபின்னரும்கூட இன்றும் இம்மாவட்டங்களில் தமிழர்களே பெரும்பான்மையினராக உள்ளனர்.

உண்மையில் 1950கள் வரை கிழக்கு மாகாணத்தில் தமிழர்களே மேலாதிக்கம் கொண்டு காணப்பட்டனர். இக்காலத்திற்குப் பின்னரே இந்நிலைமையில் ஈடாட்டம் ஏற்பட்டது. ஆனலும் முற்றுகத் தேய்ந்து மறைந்து விடவில்லை. தொடர்ச்சியாக பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற சிங்கள அரசுகளின் திட்டமிட்ட இனவாதக் கொள்கைகளாலேயே இந்நிலைமை உருவாகியது. திருகோணமலை மாவட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் வடக்கே கந்தளாய் திட்டத்தின் கீழும், மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லோயா திட்டத்தின் கீழும் இச்சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப் பட்டன, சிறுபான்மை இனத்தை முற்றுக அழிப்பதற்கும் தமிழர்களுக்குத் தங்களுடைய பாரம்பரிய மண்ணின் மீதுள்ள உரிமையை மறுதலிப்பதற்குமே தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளால் இத்தகைய குடியேற்றங்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டன. இந்த ஆபத்தானது இன்னும் நீங்கிவிடவில்லை. பாரிய மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் மதுறுஓயா குடியேற்றத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசத்திற்கு ஏற்பட்டுள்ள இன்றைய அச்சுறுத்தலாகும். இப்பிரதேசத்தைச் சூழ சிங்கள - பௌத்த குடியேற்ற வாசிகள் பெருமளவில் குவிக்கப்படுவதுடன் சிங்கள - பௌத்த விஸ்தரிப்பிற்கு இப்பகுதி இரையாகவிருக்கிறது

தொடரும்

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

✱✱✱✱

✱✱✱✱

பாசிச அரசின்விமானப்படையினர் தமிழீழ பகுதியில் உள்ள காடுகளில் நஞ்சு வாயுக்களை தெளிக்கின்றனர் (Spray) அவ்வாயுக்களினுல் காடுகளை எமது பாசறைகள் என வாழும் போராளிகளின் நடமாட்டம் பெரிதும் பாதிக்கப்படுவதுடன், இனவெறி சர்வாதிகார ஆட்சியாளர்களின் கொடுமைகளுக்கு பயந்து தங்கள் குடியிருப்புகளை உடைமைகளை ஆங்காங்கே விடுத்து காடுகளை நோக்கி தஞ்சமடையும் அப்பாவி தமிழ் மக்களின் உயிர்களையும் கொலை கொள்ளும் நிலைகாணீர்.

✱✱✱✱

✱✱✱✱

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

# பொங்குதே தமிழர் உள்ளம்

1. பொங்குதே தமிழர் உள்ளம்
    புதியதோர் உவகை நாடிப்
பொங்குதே தமிழர் பூமி
    புறமெனக் கண்ட படையோர்
சிங்கள வெறியர் நம்மைச்
    சித்திர வதைகள் செய்து
எங்களை அடக்கி ஆள
    இவர்க்கென்ன உரிமை இங்கு?

2. காரிருள் ஆட்சி தன்னை
    களைந்திட எழுந்து நின்றோம்
பாரினுள் எங்கள் தமிழை
    காத்திட உயிர்கொண்டெழுந்தோம்
பேரிருள் சூழும் வண்ணம்
    பெரியதோர் சூழ்ச்சி செய்தார்
பாரினுள் இது போல் இல்லை
    பயங்கரக் கொடுமை செய்தார்-

3. வெட்டியே வீழ்த்திடுவோம்
    வீணர் தம் செய்கை தன்னை
எட்டியே உதைத்திடுவோம்
    ஈனர் தம் இழிந்த நெஞ்சைப்
பட்டிகள் தோறும் சென்று
    படைகளைத் திரட்டிடுவோம்
முட்டியே எங்கள் மண்ணை
    மீட்டிடப் போர் புரிவோம்-

௪. செந்தமிழ் ஈழம் ஒன்றே
    சிந்தையில் உறுதி மூட்டி
வெந்திடும் தமிழர் வேட்கை
    வென்றிடும் உண்மை ஆச்சு
சந்ததம் கதிர் பரப்பும்
    சரித்திர வேங்கை வீச்சு
சிங்களர் அதர்மம் யாவும்
    சிதறியே போச்சு ! போச்சு !!

**கண்ணு**
தமிழீழம்

"பிற மக்களை அடிமைப்படுத்தும் மக்கள்
தமக்குத் தாமே விலங்கிட்டுக் கொள்கிறார்கள்"

— கார்ல் மார்க்ஸ்.

நூல்-அஞ்சல்

பெறுநர்

........................................

........................................

........................................

........................................

அனுப்புதல் :

ஆசிரியர்,
"மலரும் தமிழீழம்."
31/16, கரீம் பில்டிங்,
தில்லைநகர்,
திருச்சி - 600 018.